Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 05 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 15 (18.04.2003) வெள்ளிக்கிழமை இதழ் :197

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk
(சி-754)

# மூதூரில் மோதல் வெடித்தது நால்வர் பலி; 20 பேர் காயம்!

## விண்ணாணம் விநாசியர்



அரசியல் தீயில் குளிர்காய வெளிக்கிட்டு - அத கொளுந்து விட்டெல்லே எரிய வைக்கினம்!

## ஊரடங்குச் சட்டம் அமுலானது

(திருமலையிலிருந்து சசிக்குமார், கீதபொன்கலன்)

**கடந்த சில தினங்களாக கொந்தளிப்பு நிலையில் காணப்பட்ட திருமலை-மூதூர் பிரதேசத்தில், நேற்று தமிழ் - முஸ்லிம் மக்களிடையே பெரும் மோதல் வெடித்தது. தோப்பூரில் நடந்த சம்பவத்தில் நால்வர் பலியாகினர். இருபது பேர் காயமடைந்தனர். நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்காக ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை 6 மணிமுதல் அமுல்செய்யப்பட்டது.**

நேற்று மாலை, தோப்பூர் பகுதியில் முஸ்லிம் குழுவொன்று தமிழ் மக்களைத் தாக்க முனைந்தபோது ஏற்பட்ட மோதலில், நான்கு முஸ்லிம்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இதில் மேலும் 17 முஸ்லிம்கள் காயமடைந்தனர்.

இப்பிரதேசத்திலுள்ள முஸ்லிம்களின் சில வீடுகளும் தீயிடப்பட்டதுடன், இரண்டு மோட்டார் சைக்கிள்களும் ஒரு எல்வ் வானும் தீயிடப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது -

நேற்றுமுன்தினம் மதியம் கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்ட இரு குழுக்களிடையே ஏற்பட்ட பிரச்சினையை, சின்னத்தம்பி கலைவேந்தன் என்ற கிழக்குப் பல்கலைக்கழக மாணவன் சமரசம் செய்துவைக்க முயன்றபோது, முஸ்லிம் இளைஞர் ஒருவர் இவர் மீது தாக்குதல் நடத்தியதில் இவர் படுகாயமடைந்தார்.

இதனால் ஆத்திரமுற்ற தமிழ் இளைஞர்கள், முஸ்லிம் இளைஞர்கள்மீது தாக்குதல் நடத்தவே இரு பகுதியினரும் தொடர்ந்து மோதலில் ஈடுபட ஆரம்பித்தனர்.

தமிழ் இளைஞர்கள் உள்ளூரில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் எம்.பிக்கள் கோரிக்கை

முஸ்லிம் மக்களின் நலனைப் பாதுகாப்பதற்காக, மூதூர் பகுதி தமிழ் மக்கள் கடுமையாகப் பாடுபட வேண்டுமென, தமிழ்க் கூட்டமைப்பு திருமலை எம்.பிக்களான இரா.சம்பந்தனும் துரைரட்ணசிங்கமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கௌரவத்தைக் குறையாதீர் மகேஸ்வரன் கோரிக்கை

மூதூரில் நின்று கொண்டு அமைச்சர் ஹக்கீமின் அழைப்பை ஏற்று அங்குசென்று, கட்சியின் மானத்தையும் பிரதமருக்குரிய கௌரவத்தையும் குறைத்துக்கொள்ள முயல வேண்டாமென - அமைச்சர் மகேஸ்வரன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்று அவசர கடிதமொன்றில் கோரியுள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன திருகோணமலைக்கு விரைவு!

தற்பொழுது மூதூரில் ஏற்பட்டுள்ள பதற்றநிலையைத் தொடர்ந்து, பிரதமரின் பணிப்பையடுத்து பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன திருகோணமலைக்கு விரைந்துள்ளார். திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் இன்று அமைச்சர் தலைமையில் உயர்மட்டச் சந்திப்பு நிகழுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, கொழும்பிலிருந்து - விசேட விமானம் மூலம் பத்திரிகையாளர்களை மூதூருக்குக் கொண்டுவருவதற்கான ஒழுங்குகளை அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேற்கொண்டுள்ளார்.

ஆனால், ஹக்கீம் மூதூரில் நிற்கின்றமையே அங்கு பதற்றநிலை தோன்றக் காரணம் எனக் கருதப்படுவதால், இன்று ஹக்கீம் மூதூரைவிட்டு வெளியேறலாம் எனக் கூறப்படுகிறது.

இன்று திட்டமிடப்பட்டிருந்த - விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. (04,01)

## தமிழர் மீதான தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் கண்டனம்

(கிளிநொச்சி)

மூதூரில் தமிழ்மக்கள் மீது முஸ்லிம் காடையர் கும்பல்கள் வேண்டுமென்றே தாக்குதல் நடத்துவது குறித்து, விடுதலைப் புலிகள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களாக - தமக்கு வேண்டிய உணவு மற்றும் அத்தியவாசியப் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியாது, சம்பூர் பிரதேச தமிழ் மக்கள் தடுக்கப்பட்டிருப்பதுடன், மூதூர் தமிழ்ப் பிரதேசங்களில் முஸ்லிம் காடையர் கும்பல் தமிழ் மக்களைத் தாக்குவதாகவும் விடுதலைப் புலிகள் தமது கண்டனத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, உடனடியாக ஸ்தலத்திற்குச் சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதுடன், தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டுமெனவும், இலங்கைப் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜெனரல் ரெலவ்சனிடம் விடுதலைப் புலிகள் தொலைபேசி மூலம் கேட்டுள்ளனர்.

## சக்திகிரீவனை பிணையில் நீதிமன்றம் விடுவித்தது!

### சிறுவர்களை வாழ்வகத்துக்கு அனுப்ப நீதிவான் உத்தரவு

கைதடி சைவச்சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற விவகாரம் தொடர்பாக, சந்தேகத்தின்பேரில் சாவகச்சேரிப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு, யாழ்.சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த, யாழ்ப்பாண இந்துசமயப் பேரவையின் செயலாளரான இ.சக்திகிரீவன் நேற்றையதினம், சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் 25 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

அத்தோடு- இப்பிரச்சினை தொடர்பாக சக்திகிரீவனுடன் கைதுசெய்யப்பட்ட மேலும் மூவர், தொடர்ந்தும் யாழ்.சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சிறுவர் இல்லப் பராமரிப்பிலிருந்த சிறுவர்களை, உடுவிலிலுள்ள வாழ்வகத்தில் அனுமதிக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

கைதடி சைவச்சிறுவர் இல்லம், சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற நீதிவான் அரியநாயகத்தின் பணிப்பின்பேரில், மறுஅறிவித்தல்வரை சீல் வைத்து மூடப்பட்டது.

மேலும், சக்திகிரீவன் சார்பில்-சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் வரவை அறிந்ததும் என்னை விடுவித்துவிட்டு ஓடினர்

### மூதூரில் கடத்திச்செல்லப்பட்டு விடுதலையானவர் தகவல்

கடந்த புதுவருட தினமன்று - மூதூர் பிரதான வீதிப் பகுதியில் வைத்து செ.சந்திரசேகரன் (வயது-34) என்ற தமிழ் இளைஞர் முஸ்லிம் இளைஞர்கள் மூவரால் கடத்தப்பட்டார்.

மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், மூதூர் - தாராபுரம் பகுதியிலுள்ள தனது மனைவியின் வீட்டுக்கு, சித்திரைப் புத்தாண்டுக்காக கடந்த 13 ஆம் திகதி மன்னாரிலிருந்து வந்திருந்தார்.

மூதூர் பிரதான வீதியில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு அருகில் வைத்து, 14 ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு- துணியினால் முகத்தை மூடி மறைத்திருந்த மூன்று முஸ்லிம் இளைஞர்களால், இவர் வலுக்கட்டாயமாக கைகளும், கண்களும் கட்டப்பட்டுத் துவிச்சக்கர வண்டியில் ஏற்றிக் கடத்தப்பட்டார்.

ஏறத்தாழ அரைமணி நேரத்துக்குப்பின் - நகரிலுள்ள முஸ்லிம் இளைஞர் ஒருவரின் வீட்டில் இவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இரவு 11 மணியளவில் - கடத்திய மூன்று இளைஞர்களால் அவ்வீட்டிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட சந்திரசேகரன், 'புலிகளின் ஆதரவாளர் நீர், எனவே புலிகளால் கடத்தப்பட்ட எங்களது இரண்டு முஸ்லிம்களை விடுவிக்க முயற்சி செய்யவேண்டும்' என்று கேட்டு பயமுறுத்தப்பட்டுள்ளார்.

அதற்கு சந்திரசேகரன் - தான் அப்பாவி இளைஞன் என்றும், தனது சொந்த இடம் மன்னார், முருங்கன் பிரதேசம் என்றும், மூதூர்ப் பிரதே

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மற்றுமொரு தமிழ் முதியவரும் மூதூரில் வைத்து கடத்தப்பட்டார்

மூதூர் பிரதேசத்தில் தொடரும் ஆட்கடத்தல்களின் தொடர்ச்சியாக, நாகமணி இராசலிங்கம் என்ற 60 வயது முதியவரும் இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இவர் பற்றிய தகவல்கள் ஏதும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

முஸ்லிம்கள் அதிகமாக வாழும் மூதூர் - பிரதான வீதியில் வைத்தே இவர் கடத்தப்பட்டதாகவும், அச்சமயம் இவ்வீதியில் பொலிஸார் கடமையிலிருந்ததாகவும் கூறப்படுகிறது. (04)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128
(சி-730)

# தமிழ்க் கூட்டமைப்பு அரசை கவிழவிடாது

## மூதூர் சம்பவம்பற்றி ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி.

(மட்டக்களப்பு)

இன்றைய சூழ்நிலையில் அரசாங்கத்தை கவிழ்க்க யாரும் நினைத்தால், அரசாங்கத்துக்கு பூரண ஆதரவு வழங்க தமிழ்க்கூட்டமைப்பினர் தயாராகியுள்ளனர் என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

மூதூரில் இடம்பெற்றுவரும் முஸ்லிம் காங்கிரஸ், அரசு தரப்பு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குகிடையில் ஏற்படும் சச்சரவினால், அரசாங்கத்துக்கு ஆபத்து ஏற்பட்டால் அது தொடர்பான கூட்டணியின் நிலைப்பாடு என்ன என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருகின்றது. சமாதான முயற்சியை குழப்பும் வகையில் அரசாங்கத்தை எவராவது கவிழ்க்க முற்பட்டால், அரசாங்கத்தைக் காப்பாற்ற வேண்டிய தார்மீகப் பொறுப்பு தமிழ்க் கூட்டமைப்புக்குண்டு என்று ஜோசப் பரராஜசிங்கம் மேலும் தெரிவித்தார்.

## பத்தாயிரம் பட்டதாரிகள் நிரந்தரமாக்கப்படவில்லை

1999 ஆம் ஆண்டு பல அரச நிறுவனங்களில் கடமைக்குச் சேர்க்கப்பட்ட 10,000 பட்டதாரிகள் இன்னும் நிரந்தரமாக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கணக்காய்வுத் திணைக்களம், பொது நிர்வாகம், நூலகம் போன்ற பல அரச துறைகளில் இவர்களுக்கு வேலை வழங்கப்பட்டது.

தகுதிகாண் காலம் மூன்று வருடமாக இருந்தபோதிலும், இரு வருடங்கள் முடிவடைந்த பின்னராவது இவர்களுக்கு நியமனம் நிரந்தரமாக வழங்கப்படவில்லை.

இதனால் இவர்கள் அரச ஊழியர்கள் பெறும் சலுகைகளை இழக்கிறார்கள் என்று இலங்கை ஆசிரிய சங்கச் செயலாளர் தெரிவித்தார்.

## குளிரூட்டிய பயணிகள் பஸ் புதூரில் தடம்புரண்டது

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி 41 பயணிகளுடன் சென்று கொண்டிருந்த குளிரூட்டப்பட்ட பேருந்து ஒன்று, முன்னால் வந்த ஊர்தி ஒன்றுக்கு வழிவிட்டபோது தடம்புரண்டது.

இச்சம்பவம் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் புதூர்ச் சந்திப் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

இதன்போது சாரதியும், சாரதியின் மகனும் சிறுகாயங்களுக்குள்ளாகினர்.

## கண்டி கலாசார நிகழ்வுக்கு 21 யாழ். சிறுவர் செல்வர்

கண்டி - குண்டசாலையில் இடம்பெறவுள்ள கலை, கலாசார நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக, யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஏற்பாட்டில், யாழ். குடாநாட்டில் இருந்து, 21 பேர் கொண்ட சிறுவர் குழு கண்டிக்குச் செல்லவுள்ளது.

இவர்களுடன் 5 பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் உடன் செல்லவுள்ளனர்.

சித்திரை மாதம் 21 ஆம் திகதியிலிருந்து 25 ஆம் திகதி வரை கண்டியில் இடம் பெறும் இக்கலை, கலாசார நிகழ்வுகளில் இலங்கையின் சகல மாவட்டங்களில் இருந்தும் சிறுவர்கள் கலந்து கொள்ளவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(09)

## மீண்டும் சொந்த இடங்களில் 59 பாடசாலைகள் இயங்க ஆரம்பம்

(மானிப்பாய்)

கடந்த காலங்களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக, இடம்பெயர்ந்து பிற இடங்களில் இயங்கி வந்த 59 பாடசாலைகள், மீண்டும் சொந்த இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

2000 ஆம் ஆண்டு மே மாதம் குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து, தென்மராட்சிப் பிரதேசத்தின் பல பாடசாலைகள் இடம்பெயர்ந்து, வலிகாமம் மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் இயங்கி வந்தன.

யுத்தநிறுத்தம் ஏற்பட்டு சுமுகநிலை தோன்றியதையடுத்து, மேற்படி பிரதேசப் பாடசாலைகள் மீண்டும் சொந்த இடங்களில் இயங்கி வருகின்றன.

தென்மராட்சிப் பிரதேசத்தின் 67 பாடசாலைகளில் தற்பொழுது 59 பாடசாலைகள் சொந்த இடங்களில் இயங்குகின்றன. இவற்றில் மொத்தம் 15,000 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். 712 ஆசிரியர்கள் இவற்றில் பணியாற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.(100)

## புனர்வாழ்வுக்கழகம் உதவிசெய்யும்

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் படையினரால் கைதுசெய்யப்பட்டு, சிறைகளில் அடைக்கப்பட்டு, சித்திரவதைகளுக்குட்படுத்தப்பட்டு, பாதிப்புற்றவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது. இவ்வாறு கைது செய்யப்பட்டு விடுதலையாகி உடல், உள பாதிப்பிற்குள்ளானவர்கள் - 82/1, கே.கே.எஸ். வீதி, கொககுவில் எனும் முகவரியில் அமைந்துள்ள, தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ். மாவட்டப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## மறைந்திருந்து தாக்கியதில் தலையில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மறைந்திருந்த இருவர் தாக்கியதில் தலையில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர், மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம், கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு கரவெட்டிப் பகுதியில் இடம்பெற்றது. இதன்போது, கரவெட்டியைச் சேர்ந்த ரட்ணநாதன் செந்தூரன் (வயது 17) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

(13)

## கிளிநொச்சியில் நெற்பயிர் எரிந்து நாசம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பன்னங்கண்டி என்னும் பகுதியில் நேற்று முன்தினம் மாலை, ராசையா கமத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 1 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதி வாய்ந்த நெற்பயிர் எரிந்து நாசமாகியது.

அருகில் உள்ள வயலில் வைக்கோலுக்கு வைத்த தீ - வெட்டி, சூடுவைக்கப்பட்டிருந்த நாலு ஏக்கர் நெற்பயிரில் பற்றியதாலேயே நெல் எரிந்து நாசமாகியது.

(34)


## சிறு விளம்பரம்

### பல்கட்டுதல்

பல்கட்டுதல், பல் கிளிப்போடுதல், நல்லமுறையில், நியாய விலையில் மேற்கொள்ளலாம். கண் பரிசோதிக்கப்பட்டு நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறலாம். (மொறாயஸ்) ஒளிச்சுடர் பல் மூக்குக் கண்ணாடி அகம். இல-05, பலாலி வீதி, அப்பலோ கிளினிக் முன், யாழ்ப்பாணம். (சி-805)

ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

சரத்குமார் (இருவேடம்), சிம்ரன், ரோஜா, வடிவேல் நடித்த

அரசு

10.30, 2.30, 6.30, 9.30

(சி-732)

திறைஞ்சனாஸ் சங்கானை

விஜயகாந், சிம்ரன் நடித்த

ரமணா

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

URASSIC PARK 3

(சி-731)


## பிணைமறுப்புக்கு எதிராக ரத்வத்த மேன்முறையீடு

கண்டி, உடதலவின்னை கொலை வழக்கின் முதலாம் எதிரியான அனுருத்த ரத்வத்தவின் பிணை மனு, நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டதற்கு எதிராக, ரத்வத்த உயர் நீதிமன்றுக்கு மேன்முறையீடு செய்யவுள்ளார்.

ரத்வத்தவின் உடல்நிலை மற்றும் விடுதலைப் புலிகளின் கொலைப் பயமுறுத்தல் காரணமாக, பிணை வழங்குமாறு நீதிமன்றத்தைக் கேட்டபோது, அப்பிணை மனுவை நீதிமன்றம் நிராகரித்தது. இதையடுத்தே - நீதிமன்றம் விதித்திருந்த தீர்ப்பை ரத்துச் செய்யுமாறு, உயர் நீதிமன்றுக்கு மேன்முறையீடு செய்யப்படவுள்ளது.

இதேபோன்று, மேலும் 14 எதிரிகளுக்குப் பிணை வழங்குமாறு உயர் நீதிமன்றிடம் முறையீடு செய்யவுள்ளதாக அவர்களின் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

## சுகாதார அதிகாரிகளை சுமந்துசெல்லும் அம்புலன்ஸ்

உலக சுகாதார நிறுவனத்தால் வழங்கப்பட்ட எட்டு அம்புலன்ஸ் வண்டிகளில் மூன்றினை, வடக்கு-கிழக்கு சுகாதார அமைச்சைச் சேர்ந்த உயர் சுகாதார அதிகாரிகள், தனிப்பட்ட நோக்கங்களுக்காகப் பாவித்து வருவதாக, தமிழ்க கூட்டமைப்பின் வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், சுகாதார அமைச்சருக்கு கடிதம் மூலம் புகார் தெரிவித்துள்ளார்.

சுகாதார அதிகாரிகள் - தமது சொந்தத் தேவைகளுக்காகப் பாவித்துவரும் இந்த மூன்று அம்புலன்ஸ் வண்டிகளிலும் பொருத்தப்பட்டிருந்த மருத்துவ உபகரணங்களை நீக்கியுள்ளதோடு, தமது வசதிக்கேற்ப மேலதிக இருக்கைகளைப் பொருத்தியுமுள்ளனர் என, அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வரவுப் பதிவேடுகளுக்குப் பதிலாக இயந்திரங்கள் பொருத்த யோசனை

அரசாங்கக் காரியாலயங்களில் வரவுப் பதிவேடுகளை நீக்கி, வரவு நேரத்தைப் பதிவு செய்யும் இயந்திரங்கள் பொருத்தப்பட வேண்டுமென்று, அமைச்சர் அலிக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

பதிவேடுகளைப் பேணும் நடைமுறை காலத்துக்குப் பொருத்தமற்றது, செயற்திறன் அற்றது என்றும் அவர் கூறினார்.

பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளும் தினமாக ஒதுக்கப்பட்ட புதன்கிழமை நாட்களில், அரசாங்க அதிகாரிகளின் வரவு திருப்திகரமாக இல்லை. இது குறித்து பொதுமக்கள் அடிக்கடி முறைப்பாடு தெரிவிக்கிறார்கள். தமது கடமைகளைச் சரிவர நிறைவேற்றாது இருக்கும் அதிகாரிகள் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## வடமராட்சி கிழக்குப்பகுதியில் வசதிகளற்ற பாடசாலைகள்

வடமராட்சி கிழக்கு, மாமுனை முதல் கட்டைக்காடு வரையுள்ள பிரதேச மக்கள் மீள் குடியமர்ந்துவருவதையடுத்து, அப்பகுதிப் பாடசாலைகளும் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்தும் ஒரு வருடம் கடந்த நிலையில், எதுவித வசதிகளும் இன்றி பாடசாலைகளில் மாணவர்கள் கல்விபயின்று வருகின்றனர்.

அடிப்படை வசதிகளற்ற நிலையில் மரநிழலில் தரையில் அமர்ந்து இப்பாடசாலையில் மாணவர்கள் கல்விபயின்று வருகின்றனர். (34)

### ஒத்திவைப்பு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் இன்று நடாத்தப்படவிருந்த முத்தமிழ்க் கலைவிழா, தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


## யாழ்ப்பாணம்-மாநகரசபை

### பெரியகடை மரக்கறிச் சந்தைக்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2003

கீழ்க்காணும் சந்தையை 2003ம் ஆண்டு மே மாதம் தொடக்கம் 31.12.2003 காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவக்கட்டணம் ரூபா 250 செலுத்துவதன் மூலமும், கீழ்க்குறிப்பிடப்படும். கேள்விப்பிணைப்பணம் செலுத்துவதன் மூலமும் கேள்விப்படிவங்களை 24.04.2003 ஆம் திகதி பி.பகல் 3 மணிவரை இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள்யாவும் அன்றைய தினம் 3.30 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் . பிற்பகல் 3.30 மணிக்கே கிடைக்கப்பெற்ற கேள்விகள் யாவும் திறந்து பரிசீலிக்கப்படும்.

பெரியகடை மரக்கறிச்சந்தை கேள்வி சமர்ப்பித்து சித்தி பெறுபவர் அன்றைய தினமே அதன் பகுதிப்பணத்தைச் செலுத்தி ஒப்பந்தம் செய்யக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| | கேள்விப்பிணைப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|
| பெரியகடை மரக்கறிச்சந்தை | 10000/- | 252000/- (வற் நீங்கலாக) |

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
2003.04.17

(சி/853)

இ. இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

## வங்கி அறிவித்தல்

### 21-04-2003 திங்கட்கிழமையன்று விசேட வங்கி விடுமுறை தினமாகும்

கீழ்வரும் வங்கிகள் அன்று மூடப்பட்டிருக்கும் என வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

- இலங்கை வங்கி
- மக்கள் வங்கி
- கொமர்ஷல் வங்கி
- ஹட்டன் நஷனல் வங்கி
- தேசிய சேமிப்பு வங்கி
- செலான் வங்கி

(சி/852) யாழ்.மாவட்ட வங்கியாளர் சங்கம்

# கூட்டணி எம்.பிக்கள் நாளை தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

## ஆனந்தசங்கரி கலந்துகொள்ளமாட்டார்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான சந்திப்பு நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களை கிளிநொச்சியில் நடைபெறும் கலந்துரையாடலுக்கு வருமாறு புலிகள் அழைப்புவிடுத்துள்ளனர். நாளை காலை 10 மணியளவில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில், கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம், துரைரட்ணசிங்கம், அரியநாயகம் சந்திரநேரு ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதாகக் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி இந்தச் சந்திப்பில் பங்குபற்றமாட்டார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆனந்தசங்கரி அவுஸ்திரேலியாவில் இருப்பதாகவும், அவர் நாளை மறுதினமே நாடு திரும்புவார் என்றும் கூறப்படுகின்றது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் அண்மையில் மேற்கொண்ட சந்திப்பிலும் ஆனந்தசங்கரி பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# 'சார்ஸ்' நோயாளியை நாடு கடத்த அரசு திட்டம்

பெரதெனியா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைபெற்றுவரும், பிரித்தானியாவைச் சேர்ந்த 'சார்ஸ்' நோயாளியை நாடு கடத்துவதற்கு, உள்நாட்டலுவல்கள் அமைச்சு திட்டமிட்டுவருகின்றது.

நோயாளிக்கு சிகிச்சை அளிப்பதனால், பெரதெனியா வைத்தியசாலையில் ஏற்பட்ட குழப்பகரமான சூழ்நிலையைத் தொடர்ந்தே மேற்படி நடவடிக்கையை உள்நாட்டலுவல்கள் அமைச்சு மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

இலங்கையில் - பிலிப்பைன்ஸ் நாட்டுப் பெண்ணொருவர், 'சார்ஸ்' நோய்க்குரிய குணங்குறிகளோடு அடையாளம் காணப்பட்டதன் பின்னர், சிங்கப்பூர் நாட்டுப் பிரஜை ஒருவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் 'சார்ஸ்' நோயாளி என இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்படி பிரித்தானியப் பெண்மணி, இலங்கைக்கு வந்த மூன்றாவது 'சார்ஸ்' நோயாளி என்பது குறிப்பிடத்தக்கது.

# எம்மை வெல்ல முடியாதென்ற நிலையில்தான் சிங்களதேசம் சமாதானத்துக்கு உடன்பட்டது!

## மானுடத்தின் தமிழ்க்கூடல் விழாவில் காருண்யா

(திருகோணமலை)

சமூகத்தின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் படைப்பாளிகள் பங்களிக்க முன்வரவேண்டும் என்று திருமலையில் இடம்பெற்ற மானுடத்தின் ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய திருமலை மாவட்ட மகளிர் அரசியற் பொறுப்பாளர் காருண்யா அழைப்பு விடுத்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

கொடூர யுத்தத்தின்போதும், வன்னிபெருநிலத்தில் போரின் வேதனையை, கொடூரத்தை வெளிப்படுத்தும் யதார்த்தமான படைப்புக்கள் வீறுடன் பிறந்தன. கலை குறித்த முன்னனுபவம் பெற்றவர், பெறாதவர் என்ற வேறுபாடின்றி அனைவரும் தமது உள்ளத்தின் வேதனைகளை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தினர்.

எல்லோரும் ஆடினோம், பாடினோம், களத்தில் நின்ற போராளிகளும் கவிதை எழுதினர். எல்லோரும் இதனை வெளிப்படுத்தினோம். அங்கு பேர்பெற்ற படைப்பாளர் எவரும் இருக்கவில்லை. பாமரரும், மற்றோரும் தாம்பட்ட துயரை வெளிப்படுத்தினர். அகதி வாழ்வின் அவலத்தை அவர்கள் பாடினர்.

தெருவோரங்களில் வாழ்ந்துகொண்டு, தாம் குடிக்கும் கஞ்சியை எமக்குத் தந்து மக்கள் பசியாற்றினர். தமது உதிரத்தை எமது விழுப்புண்பட்ட போராளிகளுக்கு வழங்கி, உயிர் காத்தனர். 'ஓயாத அலைகள்' போரின்போதும், போரின் அவலத்தைப் பாடினார்கள்.

'தீச்சுவாலை' இராணுவ நடவடிக்கையின்போது, நாம் தொடுத்த எதிரி மீதான பாரிய தாக்குதலால், நாம் பலமாக இருப்பது எதிரிக்குப் புரிந்தது. நாம் சமாதானத்திற்கு முன்வந்தபோது, நாம் பலவீனம் அடைந்துவிட்டோம் எனச் சிங்களதேசம் கூறியது. ஆனால், நாம் பலமாகவே இருக்கின்றோம் என்ற செய்தி 'தீச்சுவாலை' எதிர்ச்சமரில் புரியவைக்கப்பட்டது.

புலிகள் சமாதானத்திற்கு எதிரானவர்கள் என்று கூறுவதற்கு எவருக்கும் அருகதையில்லை. சமாதானச் சூழலிலும் - எம்மீதும், எமது போராளிகள் மீதும் பல்வேறு அடக்குமுறைகள், அழுத்தங்கள் தொடுக்கப்படுகின்றது. இவ்வாறாக எம்மைச் சீண்டிப் பார்க்கும்நிலை தொடர்கின்றது.

ஆனால், நாம் பொறுமைகாத்து நிற்கின்றோம். நாம் சமாதானத்தில் உறுதியுடன் உள்ளோம்.



பல ஏமாற்றங்கள் கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்டன. எனினும், நாம் நம்பிக்கை இழக்கவில்லை. சமாதானத்தை உணர்வுபூர்வமாக முன்னெடுக்க விரும்புகிறோம்.

சிங்களதேசம் எம்மை வெல்லமுடியாது என்ற நிலையில்தான் சமாதானத்திற்கு உடன்பட்டது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம். எமது நோக்குகளை ஒன்றிணைத்து முன்னெடுப்போம். எமது போராட்ட வாழ்வியலில் கலையும், பண்பாடும் முக்கியமானவையே.

வன்னிப்பிரதேசக் கலைஞர்கள் தமது உள்ளத்து வெளிப்பாட்டை தெருநாடகமாக நடாத்தினர். இவ்வாறான பாரிய அரங்க அமைப்பு வசதிகளை அவர்கள் கண்டதிலலை. ஆனால், கலைகள் அங்கு யதார்த்தபூர்வமாக வெளிப்படுத்தப்பட்டது.

எனவே, எமது கலைகளை, பண்பாட்டு விழுமியங்களை, எமது விடுதலைநோக்கிய பயணத்திற்கு நாம் பயன்படுத்துவோம். எமது மாவட்டம் எதிர்காலத்தில் கலைச் சோலைவனமாக மாறும் என நம்புகின்றோம் என்றார்.

# காட்டில் புதையல் தேடிய மூன்று பொலிஸார் கைது!

அம்பாறைக் காட்டுப்பகுதியில் புதையல் வேட்டையில் ஈடுபட்ட சப் இன்ஸ்பெக்டர் உட்பட மூன்று பொலிஸார் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறைப் பகுதியில் உள்ள அடர்ந்த காட்டுப்பகுதியில் புராதனமான இடமொன்றிலேயே இவர்கள் புதையல் வேட்டையில் ஈடுபட்டிருந்தனர். ஆறு கிராமவாசிகளுடன் இணைந்து இவர்கள் சமயச்சடங்கை முடித்துவிட்டு புதையல் வேட்டையில் ஈடுபட்டிருந்தனர்.

இரகசியத் தகவல் கிடைத்தையடுத்து அங்கு சென்ற பொலிஸார்- சப் இன்ஸ்பெக்டர் உட்பட மூன்று பொலிஸாரையும் கைதுசெய்து நீதிமன்றத்தில் நிறுத்தியபோது, 21 ஆம் திகதிவரை அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

# தேயிலை ஏற்றுமதி வாய்ப்பு மீண்டும் அதிகரிக்கிறது!

ஈராக் மீதான அமெரிக்காவின் போரினால், இலங்கையின் தேயிலை ஏற்றுமதித்துறையில் ஏற்பட்டிருந்த பாதிப்புக்கள் சிறிது சிறிதாக விலகி வருவதாகத் தேயிலை ஏற்றுமதியாளர்கள் தெரிவித்தனர்.

கணிசமானளவு தேயிலையை இலங்கையிடமிருந்து கொள்வனவு செய்யும் ஈராக் மீது அமெரிக்கா போர தொடுத்ததையடுத்து - இலங்கைத் தேயிலையை வாங்குவதற்கான கேள்வி, ஏலவிற்பனைச் சந்தையில் பெரிதும் குறைவடைந்திருந்தது.

இதனால், விற்பனைக்கு அனுப்பப்பட்ட தேயிலை கடந்த சில வாரங்களாக பெருமளவில் திரும்பத் தொடங்கியது. இதனால், ஏற்றுமதியாளர்களின் நன்மைகருதி அரசாங்கம் - கொழும்பில் தற்காலிகக் களஞ்சிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

ஈராக் மீதான போர் நடவடிக்கைகளின் வேகம் தணிந்து வருவதால், தேயிலை விற்பனைச் சந்தை சூடுபிடிக்கும். வாய்ப்பு உருவாகி வருவதாகத் தேயிலை ஏற்றுமதியாளர்கள் தெரிவித்தனர்.

அடுத்த வாரம் தேயிலை ஏலவிற்பனை வழமைபோல இடம்பெறும் என்றும், இதில் இலங்கைத் தேயிலைக்கு நல்ல விலை கிடைக்கும் என்று எதிர்ப்பார்ப்பதாகத் தேயிலை உற்பத்தியாளர் சங்கத்தலைவர் தெரிவித்தார்.

# பாதுகாப்பு நடவடிக்கை மட்டக்களப்பில் தீவிரம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் இராணுவத்தினரும், பொலிஸாரும் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தியுள்ளனர்.

நகரப்பகுதியில் வைத்து இராணுவப் புலனாய்வுப்பிரிவு உத்தியோகத்தர் ஒருவர் கடந்த திங்கட்கிழமை காலை சுடப்பட்ட சம்பவத்தையடுத்தே மட்டக்களப்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டிருப்பதுடன், பொலிஸாரும் - படையினருடன் இணைந்து ரோந்து சுற்றி வருகின்றனர். இராணுவ அணி ஒவ்வொன்றுடனும் பொலிஸார் ஒவ்வொருவர் செல்வதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை, இராணுப்புலனாய்வுப்பிரிவு உத்தியோகத்தர் ஒருவர் சுட்டுக்காயப்படுத்தப்பட்டதையடுத்து கைதுசெய்யப்பட்ட மூன்று இளைஞர்களையும், பொலிஸார் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

சந்தேகநபர்களான மூன்று இளைஞர்களையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான், எதிர்வரும் 29 ஆம் திகதி மூன்று இளைஞர்களையும் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டார்.



கைதடி சைவச் சிறுவர் இல்ல விவகாரம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்து சமயப் பேரவையின் செயலாளர் சி.சக்திகிரீவன் நேற்றைய தினம் பிணையில் விடுவிக்கப்பட்டு - இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரனுடன் வெளிவருவதைப் படத்தில் காணலாம். *(படங்கள்:- எவ்.எக்ஸ்.சுதர்சன்)*

# சாவகச்சேரி நீதிமன்றச் சூழலில் வெடிபொருட்கள் அகற்றப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

சேதமடைந்த நிலையிலுள்ள சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடப் பகுதிகளில் உள்ள வெடிபொருட்களை அகற்றித் துப்பரவு செய்யும் பணியில் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான்- 521 ஆவது படையணியின் தளபதிக்குக் கடந்த பெப்ரவரி 21 ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்ற வளவிலுள்ள வெடிபொருட்களை அகற்றித் துப்பரவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கடிதம் அனுப்பியிருந்தார்.

இதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதநிலையில், இம்மாதம் முதலாம் திகதி நீதிவான் மீண்டும் இக்கடிதம் குறித்து படைத்தளபதிக்கு அறிவுறுத்தியதையடுத்தே, துப்பரவுப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது படையினர் முற்றாகச் சேதமுற்ற நிலையிலுள்ள நீதிமன்றக் கட்டடச் சூழலில் துப்பரவுப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

# வட-கிழக்குப் பகுதி புனரமைப்புக்கு 200 பில்லியன் டொலர் தேவை!

(கொழும்பு)

போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நாட்டின், வடக்கு-கிழக்குப் பகுதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கு இருநூறு பில்லியன் ரூபா தேவைப்படும் என்று புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயமும் இணைந்து மேற்கொண்ட ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வில் -

இரண்டு லட்சத்து 27 ஆயிரம் குடும்பங்கள் நாட்டின், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடம்பெயர்ந்துள்ளன. 30 ஆயிரம் பெண்கள் கணவனை இழந்து விதவைகளாகியுள்ளனர்.

போரினால் 50 ஆயிரம் சிறுவர்கள் பல்வேறு வழிகளிலும் பாதிக்கப்பட்டு நலிவடைந்துள்ளனர் என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் எண்ணிக்கை சரியாகத் தெரியவரவில்லை என்றும், உள்நாட்டில் இடம் பெயர்ந்தோரைக் குடியமர்த்தி நாட்டின் வட-கிழக்குப் பகுதிகளில் புனரமைப்புச் செய்வதற்கு 200 பில்லியன் டொலர் தேவைப்படும் என்றும் அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

# 'சுபானு' புத்தாண்டு உங்களுக்கு எப்படி

## கடகம்

(புனர்பூசம் 4 ஆம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் வரை)

**உங்கள் விசேஷ தனித் திறன்கள்**

சிறந்த கிரகிப்புத் திறன், அறிவு, கடினமான விடயங்களைக்கூட எளிதில் புரிந்துகொள்ளும் திறமை, சமயோசிதமாகப் பேசுவது.

**உங்கள் பலவீனம்**

அளவிற்கு மீறிய பொறுமை, அநீதிக்கு வளைந்து கொடுப்பது, எதிலும் பயமும், துணிவின்மையும், வெற்றி பெறும் திறமை இருந்தும், போட்டிகளைத் தவிர்க்கும் இயல்பு.

### புத்தாண்டுப் பலன்கள்

**14.04.2003 முதல் 16.08.2003 வரை**

கடக ராசியினருக்கு ஏழரைச் சனி ஆரம்பமாகும் கட்டம் இது. குருபகவான் ஜென்ம ராசியில் உச்சபலன் பெற்றுச் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு ரோக சத்துரு, ஆயுள், ஜீவன ஸ்தானங்களுக்குக் குருபகவானின் சுபப்பார்வை கிடைக்கிறது. ராகு லாபஸ்தானத்தில் குடும்பக் கவலைகளும், பிரச்சினைகளும் நீடிக்கின்றன. நிதி வசதி மிகவும் சாதாரணமாகவே இருக்கும். ஆனால், செலவுகளோ கட்டுக்கடங்காமல் இருக்கும். முயற்சிகளுக்குத் தடங்கல்களும், வீண் அலைச்சல்களும், ஏதாவது ஒரு காரணத்தினால் மன அமைதி குறைதலும் ஏற்படும். அவ்வப்போது ராகுவின் உதவிகிடைக்கும். ஆம்! கோள்சாரத்தில் நன்மை செய்யும் ராசிகளைக் கடக்கும்போது, ராகு நற்பலன்களை அள்ளித்தருவார். விவாக முயற்சிகளில் வரன் அமையாது. கவலை உண்டாகும். சிறு சிறு கருத்து வேற்றுமைகள் ஏற்படுவதால், மனதில் அடிக்கடி வேதனையும், அதிருப்தியும் ஏற்படும். உத்தியோகம் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ சேர்ந்துவாழ முடியாமல் பிரிந்திருக்கும் கணவன் - மனைவி மீண்டும் ஒன்றுசேர எடுக்கும் முயற்சிகளில் ஏமாற்றமே மிஞ்சும். நெருங்கிய உறவினர்கள் குடும்ப விடயங்களில் தலையிடுவதால், பிரச்சினைகள் உருவாகும். குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்திலும் தடங்கல்கள் ஏற்படும்.

**உத்தியோகம், தொழில், வியாபாரம்**

வேலைக்குச் செல்லும் கடக ராசியினருக்கு நன்மை ஏற்படுவதற்கு மேலும் சிறிதுகாலம் காத்திருக்கவேண்டியுள்ளது. வேலையில் நிச்சயமற்ற தன்மை நீடிக்கும். தற்காலிகப் பணியில் இருப்பவருக்கு வேலை நிரந்தரமாவது தாமதப்படும். புதிதாக வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு உடனடியாக வேலை கிடைப்பது கடினம். தற்போது பார்த்துவரும் வேலையிலும் அதிருப்தியும், விரக்தியுமே ஏற்படும். உழைப்பிற்குத் தகுந்த ஊதியம் கிடைக்காது. ஆனால், உழைப்பு மட்டும் அதிகரித்துக்கொண்டே போகும். ஜீவனகாரரான சனி பகவான் விரய ஸ்தானத்தில் சஞ்சரித்து, ஏழரைச் சனி காலமும் தொடங்கியிருப்பதால், ஜீவனத்தில் இத்தகைய சிரமங்கள் ஏற்படும். (ஆதாரம் - கால ப்ரகாஸிகா மற்றும் பல பண்டைய ஜோதிட நூல்கள்) இருப்பினும் ஜூலை கடைசி வாரத்தில் உங்கள் ராசிக்கு ஜீவன ஸ்தானத்திற்குக் குருபகவானின் சுபப்பார்வை ஏற்படுவதால் அப்போது சிரமங்கள் குறையும். தொழிற்துறையினருக்கும் பல பிரச்சினைகள் ஏற்பட்டு கவலையளிக்கும். உற்பத்தியில் தடங்கலும், நிதி நெருக்கடியும், தொழிலாளர்களின் ஒத்துழையாமையும், கடன் தொல்லைகளும் ஏற்படும். தசா புக்திகள் பாதகமாக இருப்பின் தற்காலிகமாக தொழிற்சாலையைக் குறுகிய காலத்திற்கு மூடவேண்டிய அவசியமும் ஏற்படலாம். ஏற்றுமதித் துறையினருக்கு வெளிநாட்டு ஓடர்கள் குறையும். அதனால் தொழில் முன்னேற்றமும் தடைப்படும். சில தொழிற்சாலையில் ஆட்குறைப்பு அமுல்படுத்தவேண்டிய அவசியம் உண்டாகும். இறக்குமதித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் வந்த சரக்குகள் விலைபோகாமல் தங்கிவிடும் சாத்தியக் கூறுகள் உள்ளது. வர்த்தகத் துறையினருக்கும் சற்று சிரமமான காலகட்டம்தான். பல இன்னல்களையும், பிரச்சினைகளையும் நீங்கள் இப்போது சமாளிக்க வேண்டியிருக்கும். நியாயமற்ற போட்டிகள் வியாபாரத் துறையின் மீதே வெறுப்பை ஏற்படுத்தும். சில தருணங்களில் பணப் பற்றாக்குறையினால் சரக்குகள் வாங்குவது தடைப்படும். அதனால், வாடிக்கையாளர்கள் வருவது குறைந்துவிடும்.

**அரசியலில் ஈடுபடுவோர்**

கட்சித் தலைவர்கள் உங்களைப் பயன்படுத்திக்கொள்வதுடன் சரி! மற்றப்படி உங்களை அவர்கள் கண்டுகொள்ளவே மாட்டார்கள் எனக் கிரகநிலைகள் தெளிவு படுத்துகின்றன. நீங்கள் கட்சிக்கு உண்மையாக உழைத்தும், தலைவர்களுக்கு அல்லது தலைவிக்கு விசுவாசமாக இருந்தும், அவர்கள் உங்களை உதாசீனப்படுத்துவார்கள் எனக் கிரக நிலைகள் குறிப்பிட்டுக் காட்டுகின்றன. அரசியலில் நேர்மைக்கும், உண்மைக்கும் இடமில்லை என்பதை இப்போது நீங்களே ஒப்புக்கொள்வீர்கள்! ஆதலால், உங்கள் உணர்ச்சிகளைத் தற்போதைக்கு வெளிக்காட்டிக் கொள்ளாதீர்கள். ஏனெனில், அதனால் எவ்வித பயனும் ஏற்படாது. அதற்கு மாறாகக் கட்சியில் உங்கள் நிலைமை மேலும் மோசமாகக்கூடும். காலம் கனியட்டும் காத்திருங்கள்.

**மாணவ மணிகள்**

வித்யா ஸ்தானம் சிறிது பாதிக்கப்படும், ஏழரைச் சனியும் ஆரம்பமாகி இருப்பதால், கல்வி முன்னேற்றம் தடைப்படக்கூடும். கடுமையாகப் பாடுபடவேண்டியிருக்கும். வெளிநாடுகளுக்குச் சென்று உயர் படிப்புப் படிக்க விருப்பம் இருப்பின், அதற்கான விசா கிடைப்பதில் சிரமங்கள் ஏற்படக்கூடும். ஆதலால், தீவிர முயற்சி தேவைப்படும்.

**விவசாயத் துறையினர்**

விளைச்சலும், வருமானமும் எதிர்பார்க்கும் அளவிற்கு இருக்காது. இதுவரை தொல்லை தராமல் இருந்து வந்த பழைய கடன்களால் இப்போது சிரமங்கள் ஏற்படும். அரசாங்க உதவிகளையும் எதிர்பார்ப்பதில் எவ்வித பயனும் இல்லை. நீங்கள் முயற்சிசெய்து வந்த நிதி உதவிகள் கிடைப்பதிலும் பிரச்சினையே. அடிப்படை வசதிகளும் குறைவாகவே கிடைக்கும். பொறுமையாக இருங்கள். விரைவில் நல்ல காலம் பிறக்க இருக்கிறது. அதுவும், இந்த சுபானுப் புத்தாண்டிலேயே! மேலே படியுங்கள். இதன் உண்மை தெரியும்! புரியும்!

**பெண்மணிகள்**

குடும்பத்தில் சிரமங்கள், பிரச்சினைகள் என்றால், அவற்றைப் பெருமளவில் தாங்கிக் கொள்வது பெண்கள்தானே! "ஜென்ம குரு வனத்திலே" என்ற முதுமொழியை அறியாதவர் யார். குருபகவான் உங்கள் ஜென்ம ராசியில் சஞ்சரிப்பதாலும், ஏழரைச் சனி ஆரம்பமாகி உள்ளதாலும், பல சிரமங்களைச் சில மாதங்களுக்கு நீங்கள் பொறுமையுடன் தாங்கிக்கொள்ள வேண்டியுள்ளது. பணப் பற்றாக்குறையும் இருப்பதால், அன்றாடக் குடும்ப நிர்வாகம் சற்று சிரமப்பட்டே நடக்கும். மன வேதனைகளுடன், உடல் உபாதையும் இருப்பதால், உங்கள் பொறுமைக்குச் சோதனையான நேரம்தான் இப்போது. ஆனால், விடிவுகாலமும் விரைந்துகொண்டிருக்கிறது. உங்களை மகிழ்விக்க, விவாகத்திற்குக் காத்துள்ள கன்னியருக்கும் சிறு, சிறு தடங்கல்களும், தாமதமும் ஏற்படும். அதற்காகக் கவலைப்பட வேண்டாம். எப்போது விவாகம் நடக்கும் என்பதைவிட, நல்ல புகுந்த வீடும், கணவரும் அமைவதல்லவா முக்கியம்! அந்த நாளும் விரைவில் வர இருக்கிறது. அதுவரை பொறுமையுடன் காத்திருங்கள்.

**தமிழ்நாட்டின் பிரபல சோதிட சக்கரவர்த்தி ஏ.எம்.இராஜகோபாலன்**

**ஆரோக்கியம்**

உடல் நலனைப் பற்றி நீங்கள் கவனத்துடன் இருக்க வேண்டிய தன் அவசியத்தைச் சனி பகவான்ன் சஞ்சாரநிலை எடுத்தக் காட்டுகிறது. ஆயுள் ஸ்தானத்திற்குக் குரு பகவானின் பார்வை ஏற்படுகிறது. அவர் சிம்மராசிக்கு மாறியவுடன், ஆயுள் நல்லபடியே இருக்கும். அது பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால், அடிக்கடி ஏதாவது ஒரு உடல் உபாதை ஏற்பட்டுக்கொண்டிருக்கும். அதனால் உடலில் அசதியும், சோர்வும் ஏற்படும். சிறிது கவனமாக இருந்தால், உடல் உபாதைகளைத் தவிர்க்கலாம் அல்லது குறைத்துக் கொள்ளலாம்.

**பொருளாதாரம்**

வருட ஆரம்பத்திலிருந்து 16.08.2003 வரை பணவசதி திருப்திகரமாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. கைப்பணம் அனைத்தும் வீணாக விரயமாகும். வருமானத்திலும் அபிவிருத்தி ஏற்படுவது கடினம். தொழிற்துறையினர், வியாபாரிகள் ஆகியோருக்கு நிதிப்பற்றாக்குறை ஏற்படக்கூடும். வங்கி மற்றும் இதர, நிதி நிறுவனங்களினால் சிரமங்கள் உண்டாகும். கூடியவரையில் கடன் வாங்காமல் திட்டமிட்டுச் செலவுசெய்வது நல்லது. வெகுவிரைவில் தனஸ்தானம்- குருபகவானின் சுப ஆதிக்கம் பெறுவதால் பண நெருக்கடி தீரும்.

**17.08.2003 முதல் 12.04.2004 வரை.**

சென்ற சுமார் நான்கு மாதங்களாகப் பல வகைகளிலும் பலவித கஷ்டங்களை அனுபவித்து வந்த கடகராசி நேயர்களுக்கு இனி பெருமளவில் சிரமங்கள் குறையும். குடும்பச் சூழ்நிலையில் மிகநல்ல மாறுதல்களைக் காணலாம். மனைவியின் ஆரோக்கியம் அபிவிருத்தி அடையும். திருமண முயற்சிகளில் தொடர்ந்து ஏற்பட்டு வந்த தடங்கல்கள் விலகும். முக்கியமாக, நிதி நிலைமையில் மிகநல்ல முன்னேற்றம் ஏற்படும். நிதி நெருக்கடி தளரும். வருமானம் அதிகரிக்கத் தொடங்கும். தொழிற்துறை அன்பர்களுக்கு இதுவரை மறுக்கப்பட்டு வந்த வங்கிச் சலுகைகள் இப்போது கிடைக்கும். தொழிற்சாலையில் நிர்வாகப் பிரச்சினைகளும் திருப்திகரமாகத் தீரும்.

(சிங்க ராசி நாளை)

# இறந்த சீன மீனவர்களுக்கு அரசு நட்டஈடு வழங்கும்!

சீன மீன்பிடிப்படகு தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தில் இறந்த 15 சீனர்களுக்கும் நட்டஈடு வழங்க இலங்கை அரசாங்கம் முன்வந்துள்ளது.

சீன மீனவர்களுக்கு யார் நட்டஈடு வழங்குவது என்பது தொடர்பாக இருந்துவந்த இழுபறிக்கு வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

இத்தாக்குதலுக்கு யார் பொறுப்பெனக் கண்டுபிடிக்கப்படாதநிலையில், அரசாங்கமே நட்டஈடு வழங்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதாகவும் ரிரோன் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.

## வைத்தியசாலைக்கு தொலைக்காட்சி அன்பளிப்பு

யாழ்.போதனா வைத்தியசாலையின் சிகிச்சை நிலையத்திற்கு - வைத்திய அதிகாரி ஒருவர் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார். இதனால், வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகள் ஓய்வாக இருந்து சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். பகல் வேளையில் மக்கள் பார்வைக்காக இந்த தொலைக்காட்சிப்பெட்டி இயங்குகின்றது.

# கடற்கரையோரப் பகுதிகளில் புதிய இராணுவக் காவலரண்கள்

வடமராட்சி கடற்கரையோரப் பகுதிகளில் படையினர் புதிய காவலரண்கள் அமைத்து, தமது நிலைகளைப் பலப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

மீனவர்கள் படகுகளை நிறுத்தும் இடங்களில் படையினர் புதிய காவலரண்களை அமைப்பதால், மீனவர்கள் படகுகளை நிறுத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, கடற்கரையோரத்தில் நீளமாகத் தகரவேலிகளையும் படையினர் அமைத்துவருகின்றனர். இதனால், மீனவர்களின் கடற்தொழில் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. யாழ். நகரை அண்டிய குருநகர், பண்ணை, கொட்டடிப் பகுதிகளிலும் படையினர் தமது நிலைகளைப் பலப்படுத்திவருவது குறிப்பிடத்தக்கது.

# வர்த்தக நிலையத்தில் பொருட்கள் திருட்டு

## பொலிஸ் காவலரண் முன் சம்பவம்

அச்சுவேலி பஸ்நிலையப் பகுதியில் கடந்த செவ்வாயன்று நடைபெற்ற துணிகரக் கொள்ளையில்- சுமார் 4 இலட்சம் ரூபா பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

பொலிஸ் காப்பரணுக்கு முன்பாகவுள்ள இக்கடையின் கூரை பிரிக்கப்பட்டு, நள்ளிரவு வேளையில் இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சிகரட் வகைகள், மீன்ரின் வகைகள், பால்மா வகைகள் என்பனவே அதிகமாகக் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (80)

# உலகவங்கித் தலைவர் இலங்கை வருவார்

(கொழும்பு)

இந்த வருட இறுதிப்பகுதியில் உலகவங்கித் தலைவர் ஜேம்ஸ் வூல்ஹன்சன் இலங்கைக்கு வரத் திட்டமிட்டுள்ளார்.

வாஷிங்டனிலுள்ள உலகவங்கித் தலைமையலுவலகத்தில் வூல்ஹன்சனை உத்தியோகபூர்வமாகச் சந்தித்த அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் இலங்கை வரும் தன்னுடைய திட்டத்தினை அவர் தெரிவித்துள்ளார்.

உலக வங்கி தலைவர் ஒருவர் முப்பது வருடங்களுக்குப் பின்னர் இலங்கைக்கு வரவிருப்பது குறிப்பிடத்தக்கது. (01)


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

பத்தாவது அகவையில்



பெயர் : செ.சிவாஸ்கர்
முகவரி : குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.

பத்தாவது அகவையில்



பெயர் : சா.தர்சிகா
முகவரி : மருதங்கேணி வடக்கு.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்பம்

# ஒரு பூவின் பயணம்

உறக்கமில்லை. இரவும்
விழித்திருந்தது என்னோடு
நினைவுகளின் வரிசை
குலைந்த
சிடுக்குகளின் மாட்டிக்
கொண்டேன்
ஜன்னலின் வெளியே
கூவுகிறது இருட்டு.
மீட்சி அழைப்பதென.


- யுவன்

'ஏதோ ஒரு இரவில்' என்கின்ற இக்கவிதையில் மீட்சியின் முகம் தெளிவற்றுள்ளது. அது இருளோடே ஒன்றியுள்ளது. பெண் குழந்தைகளின் பிறப்புப் பற்றிய வெறுப்பும் இவ்வாறே உள்ளது. எமது சமூகத்தில் ஒரு மத்திய தர அல்லது கீழ் வர்க்கப் பெண்மணி பத்து மாதம் சுமந்து கருவைப் பெற்றெடுக்கின்றபோது, அது பெண்ணெனத் தெரியவருகையில் சோபை இழக்கிறாள், சோர்வு கொள்கிறாள், கண்ணீர் கொட்டி அழுவதும் உண்டு. குடும்பங்களுக்கே உரிய தொழில்களும் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஒரு மீனவக் குடும்பத்தில் அல்லது மர வேலை செய்பவர்களின் குடும்பத்தில், பிராமணக் குடும்பத்தில் ஆண்பிள்ளை- தந்தைக்குப் பக்கபலமாக இருக்கிறான். அதே தருணத்தில் பெண் குழந்தை சுமையாக இருக்கிறாள்.

கூலித்தொழிலாளி ஒருவர் வீட்டில் தினமும் மனைவியோடு சண்டை. குடிப்பழக்கமும் உண்டு. பெண் குழந்தையை மனைவி பெற்றெடுத்ததற்காக அவளைக் கடுமையான வார்த்தைகளால் ஏசுகிறார். ஏற்கனவே ஐந்து பெண் குழந்தைகள் அவருக்கு ஆறாவது முறையாகவும், ஆண்குழந்தைக் கனவு அடிபட்டுப்போயிருக்கிறது. ஒரு குடும்பத்தின் பாலியல் அதிகாரம் ஆணின் கைகளிலேயே உண்டு. ஆண் குழந்தைப் பிறப்பதைத் தந்தையின் xy நிறமூர்த்தமே தீர்மானம் செய்கிறது. குழந்தை பிறக்கும் தருணம், குழந்தைகளின் எண்ணிக்கை என்பன குடும்பத் தலைவனாலேயே பெரும்பாலும் தீர்மானிக்கப்படுகிறது. நாளாந்த குடும்பச் சண்டைகளின் மத்தியிலும் வருடாந்தம் குழந்தைகள் பிறந்து கொண்டே இருப்பதை இதற்குச் சான்றாகக் காட்டலாம். நிலைமை இவ்விதம் இருக்க, பெண்ணைப் பெற்ற தற்காகப் பெண்ணை பேசுவது எவ்வளவு பேதைமையானது.

மழலை இன்பம் பற்றிப் பாடும் கவிதைகள் எண்ணற்றவை.

குழலினும் யாழினும்
இனிய மழலை
மொழியை
வள்ளுவர்
வியந்து
பேசுவார். பிள்ளைத் தமிழ் இலக்கியங்கள் குழந்தையை அழகாகப் பாடுகின்றன. மழலை மொழியை



## பெண்ணோ..... பெருஞ்சுமையோ...

ஆண் குழந்தைகள் மட்டும் பேசுவதில்லை. பெண்குழந்தைகளும் தான் பேசுகின்றன. மழலைக் குறும்புகள் இருபாலாருக்கும் பொதுவே. எனினும், பெண் குழந்தைகள் பிறப்பின் தருணத்திலேயே வெறுக்கப்படுவது நியாயமா? என்ற கேள்வி எம்முள் எழுகின்றது.

எங்கள்
வீட்டுக்
கட்டில்
குட்டி
போட்டது
தொட்டில்

என்கின்ற கவிஞர் நீலமணியின் 'குட்டிபோட்டே உருவான' குறுங்கவிதையில் தொட்டில் என்கின்ற பொதுமைக்குள் ஆண் குழந்தையும், பெண் குழந்தையும் மூழ்கியிருப்பதைக் காணுங்கள். குழந்தைகள் வாழ்க்கைத் தோட்டத்தின் அற்புதமான மலர்கள். அவர்கள் எல்லாம் ரோஜாக்கள். அவர்களுள் ராஜா அடிமையேது? எனக் கேட்ட, வண்ண நிலவனின் பக்கம் சாய்கிறார் கவிஞர் நீலமணி. நாங்கள் சாய்கிறோமா? என்பதே இப்போது இங்குள்ள கேள்வி.

பெண் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது, ஒரு குடும்பத்தில் பெண் குழந்தையின் வரவு வெறுக்கப்படுகிறது. இங்கு கருச்சிதைவு செய்துகொள்ளுதல் அல்லது கர்ப்பத்தடை செய்துகொள்ளல் போன்ற நிலைகளும் இல்லாமல் இல்லை. பெண் குழந்தை எனத் தெரியவருகின்ற போது, நவீன மருத்துவ முறைகளைப் பயன்படுத்தி அதனை அழித்தல் அல்லது பிறந்த பின் கள்ளிப்பால் கொடுத்து அழித்தல் போன்ற கொடூரமான நடவடிக்கைகள் ஒப்பீட்டளவில் இந்தியாவில் அதிகமாக உள்ளன. குடும்பத்தின் பாலியல் அதிகாரம் ஆணின் கரங்களிலேயே உள்ளதெனினும், யாழ்ப்பாணத்துக் குடும்பப் பெண்கள் பேசத் தயங்கும் விடயப் பரப்பு இது. திருமணம் என்கின்ற மரபினுள் "வாழ்வின் போக்கில்" வாழ்ந்து விட்டுப்போகச் சம்மதிக்கும் குடும்பப் பெண்கள்- தமது குடும்பத்தின் தலைவரிடமே பெரும்பாலான தீர்மானங்களை விட்டுக்கொடுப்பது தமிழ் மண்ணின் மரபாக ஊறியுள்ளது. மேலும் எவ்வொரு பெண்ணும் குடும்ப உறவுச் சிக்கல்களைச் சமூகத்தில் விமர்சிப்பதும் இங்கு சாத்தியமற்றுள்ளது. திருமணத்தின் பின் இரு தெரிவுகளே பெரும்பாலும் பெண்ணுக்குண்டு. வாழ்தல் அல்லது 'கொண்டிழுத்தல்' என்பனவே அவை. மிக அரிதாக

**அத்தியாயம் 02**

விட்டுப் பிரிதலுண்டு.

சொல்லாத சேதிகள் தொகுப்பிலுள்ள சங்கரியின் கவிதை ஈழத்து மண்ணில் நிலவும் பாலியல் அசமத்துவ நிலையைச் சுட்டிப்பேசுகிறது.

சமையல் செய்தல்
படுக்கை விரித்தல்
பணிந்து நடத்தல்
இவையே எனது கடமைகள்

எமது மண்ணில் வேலைக்குப் போதலையும் பெண் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால், மேலுள்ளவற்றைத் தவிர்க்க முடியாதநிலை காணப்படுவதை மறுக்கமுடியாது.

ஒவ்வொரு பெண்ணும் எத்துணை கற்றறிந்தவளாக இருந்தாலும், சில மரபுகள் அல்லது சமூக வழமைகள் அவளது கைகளைக் கண்ணுக்குத் தெரியாத விலங்குகளாய்ப் பிணித்துள்ளன. அவற்றைக் குடும்பப் பெண்கள் மீறமுடியாதவர்களாகவே உள்ளனர்.

சிறையிருப்புக்கு மறுபெயர் திருமணம்.

அடிமைக்கு மறுபெயர் மனைவி.

உன் தாய்மைக்கு மறுபெயர் நியதி.

என்றால்

யாருக்கு வேண்டும் இவ் இருப்பு?

என்கின்ற பாமதியின் தேடல் என்கின்ற கவிதையின் சலிப்பு எம்மண்ணின் குடும்பங்களில் இல்லாமல் இல்லை. குறிப்பாகத் தாய்மை இங்கு நியதியாகவே உள்ளது. ஆனால், அந்தச் சலிப்பைப் பிறரறியா வண்ணம் புதைக்கும் வித்தை கைவரப் பெற்றதில் மேற்கண்டநிலை இங்கில்லை போன்ற தோற்றப்பாட்டினுள் எமது சமூகம் புதைந்திருக்கிறது.

வளமான குடும்பங்களில் பெண் குழந்தைகளுக்கான வெறுப்பு பலமாக இல்லை. எனினும், பொதுவான யாழ்ப்பாண மண்ணில் பெண் குழந்தைகளின் பிறப்பு, குடும்பப் பாலியல் அதிகாரம், பெண்குழந்தைகளின் பிறப்பு- வெறுப்பாவதேன் போன்றவற்றைப் பார்த்தோம். இனி பெண்குழந்தை மேலும் நடக்கிறாள், அவளோடு நாமும் நடப்போமா?

**த.சாரங்கா**

## பெண்களே, உங்கள் கூந்தல் கருமையானதாக வேண்டுமா?

### இதோ சில வழி முறைகள்



✧ சுத்தமான தேங்காய் எண்ணெய்யில் கறிவேப்பிலைத் துளிர்களைப் போட்டுக் கொதிக்க வைத்து, ஆறியதும் கூந்தலில் தினமும் தடவிக் கொள்ளுங்கள்.

✧ இவ்வாறு தடவிக்கொள்ளும் எண்ணெயை- விரல் நுனியால் மண்டை ஓட்டுப்பகுதித் தோலை மசாஜ் செய்யமறவாதீர்கள்.

✧ ஷாம்பூ, சவர்கார வகைகளை அறவே விட்டுத்தள்ளுங்கள் அதற்குப் பதிலாகச் சீயாக்காய், அரப்பு, பயற்றம்மா போன்ற இயற்கையான பொருட்களைத் தேர்ந்தெடுத்துக் கூந்தலைச் சுத்தம் செய்யுங்கள்.

✧ உணவில் கீரை, முளைகட்டிய பயறு வகைகள், பேரீச்சம்பழம், கஜு போன்றவற்றைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

✧ இரவில் பால் குடிப்பதை மறக்க வேண்டாம்.

✧ கூந்தலில் அழுக்கு, சிக்கு சேராமல் பார்த்துக்கொள்ளுங்கள் அத்துடன், எப்போதும் சுத்தமான நீரிலேயே கூந்தலை கழுவவேண்டியது அவசியம். குளிர்ந்த அல்லது இளம் சூடான தண்ணீரைப் பயன்படுத்தலாம்.


✧ பெரும் வாசனைத் திரவியங்களைக் கூந்தலுக்குப் பயன்படுத்துவதைத் தவிருங்கள்.

✧ அடிக்கடி தலைவலியா? அலட்சியப்படுத்தி இருந்துவிடாதீர்கள். தகுந்த வைத்தியரிடம் காட்டி ஆலோசனை பெறுங்கள். தலைவலியால் முடி உதிர்வது நிச்சயம்.

✧ பேன், பொடுகு, முடி நுனி வெடிப்பு போன்றவற்றுக்கு வைத்தியரின் ஆலோசனையைப் பெறுங்கள்.

✧ பதற்றத்தைக் குறையுங்கள், அடிக்கடி கோபப்படாதீர்கள், மகிழ்வாக இருங்கள். அகத்தின் அழகு முகத்தில் மட்டுமல்ல முடியிலும் தெரியும்.

# கவிதைச் சோலை



## பூவே!



என் வீட்டுத் தோட்டத்தில்
பூக்கும்; சிரிக்கும்
பூக்களின் நடுவில்தான்
பூப்பெய்தினேன்.

பதினேழு வயதில்
பெண் பார்த்துப் போனதை
பூக்களிடம் தான் சொல்லி அழுதேன்.
படித்த மாப்பிள்ளை
வெளிநாட்டு வாழ்க்கை என்றார்கள்

நந்தவனம் உதறி
இங்கு வந்து சேர்ந்தேன்

புன்னகை தொலைத்த
வெண்பனி மனிதர்களிடத்தில்
பூக்களுக்கில்லை முன்னுரிமை

இப்போதெல்லாம்
பூக்களைப் பற்றி
புத்தகத்தில் படிப்பதோடு சரி

-கவிதா குமாரன்

## மனச் சாரல்



ரகசியம் பேசிய மலர்கள்
காற்றோடு சேர்ந்து
கச்சேரி செய்த மரங்கள்

வெள்ளிக்கொலுசு
அணிந்த அருவி

பனியில் குளித்தும்
நடுங்காத புல்வெளி

வெயிலை விரும்பி
ரசிக்கவந்த
மழைச்சாரல்

மிதித்த போதும்
சிரித்த சருகுகள்

இச்சையோடு
ரசித்தும்
எரிச்சலடையாத ரோஜாக்கள்

தற்கொலைப்பாறையில்
வந்துவிழுந்தும்
எழுந்துபோன மேகம்

மார்போடு புல்வடுத்தினாலும்
பொல்லாத குளிருக்கு
பூக்களைப் போர்த்திய மலை

நடந்துபோ
துணைக்கு வந்த குளிர்காற்றை
முந்தானைக்குள்
மூடிக்கொள்கிறேன்

உயரத்திலும் சரிவிலும்
ஒரே மாதிரி சிரிப்பது
மலர்களுக்கு மட்டுமே சாத்தியமோ?

மரியா

## மரவள்ளிக் கிழங்குப் பலகாரம்



| | |
|---|---|
| மரவள்ளிக்கிழங்கு | - 1/2 கிலோ |
| தேங்காய்த்துருவல் | - 1 கப் |
| காய்ந்த மிளகாய் | - 10 |
| சோம்பு | - 1 கரண்டி |
| உப்பு, எண்ணெய் | - தேவையான அளவு |

**செய்முறை:**

கிழங்கை மண்போகக் கழுவித் தோலை நீக்கி விட்டுத் துருவுங்கள். மிளகாய், சோம்பு மூன்றையும் ஒன்றாகச் சேர்த்து தண்ணீர் சேர்க்காமல் அரைத்து எடுக்கவும். கடைசியாகத் துருவிய கிழங்கு, உப்பு ஆகியவற்றைச் சேர்த்து இரு சுற்றுச்சுற்றி அரைக்கவும். குழிப் பணியாரக் கல்லைச் சூடாக்கி , எண்ணெய் ஊற்றி , எண்ணெய் சூடாகியதும் அரைத்த மாவைப் போட்டு வேக வைக்கவும். இதனை காரமான சம்பல், சாம்பாருடன் சாப்பிடலாம்.

# எழுத்து உலகில் பெண்கள்

புதுடெல்கியில் அண்மையில் நடைபெற்ற பிரிட்டிஷ் மற்றும் தெற்காசியப் பெண் எழுத்தாளர்களின் மாநாட்டில் கலந்துகொண்டோரின் உணர்வலைகள் பற்றி எழுத்தாளர் சரோஜ் கணபத்தின் அவதானிப்பிலிருந்து...



**UK** - தெற்காசிய பெண் எழுத்தாளர்கள் மாநாட்டில், பிரிட்டன் எழுத்தாளர் மைக்கேல் ரொபர்ட், "பெண் எழுத்தாளர்கள் எழுதுவது எப்போதும் இயற்கையாக இருக்கும். உணர்ச்சியோடு எழுதுவார்கள். என்னுடைய நாவல்களில் பாதி பிரெஞ்ச், பாதி ஆங்கில கலாசாரங்க ளைக் காணமுடியும்" என்கிறார்.

இவர் எழுதிய **Daughters of the House** என்ற நாவல் **WH Smith** இலக்கிய விருது பெற்றது. 'ஸ்மைல் ஸ்மைல் ஸ்மைல் ஸ்மைல்' போன்ற கவிதை நூல்களையும் எழுதியுள்ளார் இந்தப் பல்கலைக்கழக ஆசிரியர்.

"பெண் எழுத்தாளர்களுக்கும், சீரியஸ் எழுத்தாளர்களுக்கும் வித்தியாசம் உண்டு" என்று கூறிய சசி தேஷ்பாண்டே- தன்னுடைய 'That Long Silence' என்ற நாவலை எழுதிய பின்னர்தான் எழுத்தாளர் என்ற நினைப்பு வந்ததாகக் கூறுகின்றார்.

பிரிட்டன் எழுத்தாளர் ஜோனி ரோஜர், "இலக்கியத்தில் பெண்கள் மூன்று விதங்களில் முன்னேறுகின்றனர். ஆண் எழுத்தாளர்களை (Imitating) பின்பற்றுவது, அடுத்து பெண்ணுரிமை, புரட்சிகரம், அநீதியை எதிர்த்து எழுது

அழுது, வாயைமூடி அடங்கி இருப்பதில் பலனில்லை. என்னுடைய விவாகரத்துக்குப் பின்னர், நான் தனியான வாழ்க்கைக்கு மீண்டுவந்து எழுதத் தொடங்கினேன்" என்கிறார் நபநீத தேவ் சென்.

"ஒவ்வொரு பெண் பிறக்கும் போதும் இவ்வுலகில் அமைதி பிறக்கிறது" என்ற பழமொழியைக் குர்திஷ் சோமான் ஹரிடி சொன்னார். பங்களாதேஷ் எழுத்தாளர் ஆடிட்டி பாகுனி கயன்ஸ்- தன்னுடைய நாவல் நாயகியைப் பற்றி சொல்லத் தொடங்கினார். "தன்னை பலாத்காரம் செய்த முதலாளியையும், அவரது மகனையும் கொலைசெய்து சிறையில் இருக்கும் ஒரு வேலைக்காரப் பெண்ணின் மனநிலையைக் கதையில் படம்பிடித்தேன்" என்றார். குடும்பச் சட்டம், அரசியல் சரித்திரத்தில் பங்களாதேஷ் பெண்கள் என இரண்டு ஆராய்ச்சிப் புத்தகங்களையும் வழங்கிய இவர், பங்களாதேஷில் 'தி இண்டிபெண்டன்ட்' என்ற நாளிதழில் பத்திரிகையாளராகப் பணியாற்றுகிறார்.

கொல்கத்தாவைச் சேர்ந்த எழுத்தாளர் அல்கா சரோகி (**Alka Saraogi**) எழுதிய 'காளி கதா' நாவல் சாகித்திய அக்கடமி விருதைப் பெற்றது. இவர் எழுதியது மூன்று நாவல்கள். இந்தி மொழியில் எழுதி, ஆங்கிலதிதில் மொழிபெயர்க்கப்பட்

உயிர் ஆணாகவும் இருக்கிறது. எழுத்தாளன் என்றமுறையில் இந்த வேறுபாட்டைத் தகர்ப்பதுதான் என் வேலை. புனிதத்தையும், பாவத்தையும் ஒன்றுபடுத்தி எழுதப்போகிறேன்" என்கிறார் ரொபர்ட்.

பாலியல் எழுத்துக்கள் வரும் நாவலைப் பற்றியும் வெவ்வேறு கருத்துக்களை வைத்தனர். "பெண்ணின் உடலை மையமாக வைத்து எவ்வளவு வேண்டுமானாலும் கற்பனைகளை எழுதமுடியும். அரசியல், கலை போன்ற முரண்பாடுகளை மட்டுமல்ல அறியாமை விஷயங்களில் கூட பெண்ணின் உடலைப்பற்றி பெண் எழுத்தாளர்கள் எழுதுவது தப்பில்லை" என்கிறார் சாகரிகா கோஷ்.

பல்வேறு ஆங்கிலப் பத்திரிகையில் பணியாற்றிவிட்டு, தற்போது நாவலாசிரியராக இருக்கிறார் கோஷ்.

## தனித்துவமான பார்வையுடன்!

வது, மூன்றாவது நம்மைப் பற்றி நாமே (**Self Discovery**) தெரிந்துகொண்டு முன்னேறிப் படைப்புகளை அளிப்பது" என்கிறார்.

"இப்பவுள்ள குடும்ப அமைப்புகளில் பெண்கள் முழு ஆளுமைத் தன்மையோடு வளர வாய்ப்பு இல்லை. பெண்கள் தனியாக நின்றுதான் சாதனை படைக்க முடியும். நிறைய பெண்கள் திருமணத்துக்குப் பின்னர் பின்தங்கிவிடுகின்றனர். கணவன், குழந்தைகள் என்று பெண்கள் முடங்கிப் போய்விட்டனர்" என்று கூறுபவர் தமிழக எழுத்தாளர் பாமா.

உத்திரமேரூர் அருகே உள்ள ஓங்கூர் கிராமத்தைச் சேர்ந்தவர் பாமா. தலித் பெண்ணான இவர், தலித் மக்களின் அவலங்களைப் பிரதிபலிக்கத் தன்னுடைய ஓட்டோகிராபியையே 'கருக்கு' என்ற நாவலில் எழுதிப் பிரபலமானவர். இவரது நாவலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் மினி கிருஷ்ணன். பாமாவுக்குக் குரொஸ் அவோர்ட் விருது கிடைத்தது. இவர் தற்போது பள்ளி ஆசிரியையாக இருக்கிறார். பாமா கூறுகிறார் - "ஏழு வருடம் கிறிஸ்தவக் கன்னியாஸ்திரிகள் மடத்தில் சந்நியாசியாக இருந்து நம்பிக்கையிழந்து, வெளியே வந்தேன். சிறகு உடைந்த பறவையாக விடப்பட்டேன். நான் பறக்க ஆசைப்பட்டேன். காலுடைந்த போதுதான் எழுத ஆரம்பித்தேன்" என்கிறார். இவருக்கு இன்னமும் திருமணம் ஆகவில்லை.

வங்க எழுத்தாளர் நபநீத தேவ் சென், "ஆண் - பெண் எழுத்தாளர்கள் என்று பிரிக்க வேண்டாம். சமீபத்தில் மேற்கு வங்காளத்தில் நடந்த பெண் எழுத்தாளர்கள் மாநாட்டில், பிரபல எழுத்தாளர் சுனில் கங்கோபத்தியா சொன்னதுகூட இதுதான். ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் வளர்ந்து வரும் இந்தக் காலகட்டத்தில் இப்படித் தனிமைப்படுத்த வேண்டாம்" என்று கூறிய சென், "ஆண்கள் இல்லாத எல்லா வீடுகளும் இருட்டாக இருப்பதில்லை. 'பெண்கள் தேம்பி

டது. இதில் இவருடைய 'மார்வாரிஸ்' (**Marwaris**) இனத்தைப் பற்றிய கதைகளைச் சொல்லியிருந்தார். "எந்த விஷயத்திலும் கிணற்றில் போட்ட கல்லாக இருக்கக்கூடாது. எனக்குத் தெரிந்த தகவல்களின் அடிப்படையில் எழுதினேன். அதில் உள்ளது கற்பனைகள்தான். விமர்சிக்கலாம். ஆனால், எதையுமே எழுதக்கூடாது என்றால் எப்படி?" என்கிறார் சரோகி.

பாமா எழுதியதைப் பற்றி பேசிய நாவலின் மொழிபெயர்ப்பாளர் மினி கிருஷ்ணன்- "இது பாமாவின் வாழ்க்கையில் நடந்தவைதான். அவருடைய அனுபவங்களில் இருப்பது தான், தலித் கிராமங்களிலும் இருப்பவை" என்று பேசினார்.

"மேல்ஜாதியினரைத் திருமணம் செய்து கொள்வதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், அவர்கள் எங்களை இழிவாகவே பார்க்கின்றனர். ஆனால், தலித் பெண்களைப் பாலியல் ரீதியாக அணுகுவதற்கு மட்டும் ஜாதி பார்க்கறதில்லை" என்கிறார் பாமா.

ஃபெமினா பத்திரிகைத் துணை ஆசிரியரும், மராட்டிய எழுத்தாளருமான சாந்தா கோகுலே- "மகாராஷ்டிராவில் தலித்துகளின் வேதனைகளைப் பற்றி எழுதினால், உயர் ஜாதியினர் மட்டுமல்ல, தலித் இனத்தினரே எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்." என்று குறிப்பிட்டார்.

எஸ்தர் டேவிட்- இவர் 'தி வோல்ட் சிற்றி', 'சபர்மதி' போன்ற பல கதைகளில் பெண்கள், நகர்ப்புறக் குடிசைவாசிகள் சம்பந்தப்பட்ட கதைகளை எழுதினார். ஆனால், யூத மரபினரைப் (**Jewish**) பற்றி இவர் எழுதியதுதான் இவரை எழுத்துலகில் பிரபலப்படுத்தியது. இந்தியாவில் ஆயிரத்து ஐந்நூறு வருடங்கள் முன்பு வந்த யூத மரபினர்- இஸ்ரேலில் இருந்து இந்தியாவுக்கு வந்தது எப்படி? இத்தனை ஆண்டு காலம் தங்களது பண்பாடுகளோடும் தங்கள் கலை, கலாசாரத்தோடும் வாழ்வது எப்படி என்பதையெல்லாம் எஸ்தர் படம்பிடித்துக் காட்டியிருந்தார். எஸ்தரும் ஒரு யூதர் தான, அடிப்படையில் இவர் ஒரு சிற்பி.

"கத்தோலிக்க மதத்தில் உடலுக்கும், உயிருக்கும் வேறுபாடு உள்ளது. உடல் பெண்ணாகவும்

இவருடைய முதல் நாவல் 'ஜின் டிரங்க்ஸ்'. "செக்ஸ் அரசியல்' பெண் எழுத்தாளர்களுக்குத் தேவையில்லை" என்கிறார் ரிது மேனன்.

இருபது வருடங்களுக்கு முன்பு இந்தியில் '**A**' நாவலை எழுதி பரபரப்பூட்டிய பெண் எழுத்தாளர் மிருதுளா கார்க்தான் இந்த விவாதத்துக்கு மையமாக இருந்தார். மிருதுளா எழுதிய 'சித்தர கோபுரா' என்ற நாவல் எண்பதுகளில் வெளிவந்தது. ஒரு ஸ்கொட்லாந்து புரொட்டஸ்தாந்து சேர்ச் நிர்வாகி (அமைச்சர்) இற்கும், இந்திய குடும்பப் பெண்ணுக்குமுள்ள தகாத உறவு பற்றிய நாவல் இது. நாவலை எழுதியதற்காகக் கார்க் கைதும் செய்யப்பட்டார். இந்த மாநாட்டிலும் மிகவும சுதந்திரமாகவே பேசினார்.

"பெண்கள் பாலியலில் சுதந்திரமாக இருக்க விரும்புகின்றனர். ஆனால், அவர்களுக்கு அனுமதி இல்லை. சென்ஸார் விஷயத்திலும் ஆண் - பெண் பாகுபாடு உள்ளது. இந்தி எழுத்துலகம் என்னை இருபது வருடங்கள் தள்ளிவைத்தது" என்று வேதனைப்பட்டார்.

மைக்கேல் ரொபர்ட், "பிரிட்டனில் சிறுமிகளை பாலியல் ரீதியாகத் துன்புறுத்துகின்றனர். இதையெல்லாம் எழுதாமல் எப்படி இருப்பது?" என்கிறார்.

நேபாள நாட்டிலிருந்து வந்த பெண் எழுத்தாளர் மஞ்சுஸ்ரீ தாப்பாவின் வேதனைகள் கொஞ்சம் வித்தியாசமானது.

"நீங்களாவது இந்த விடயத்தைத் தொட முடிந்தது. ஆனால், நேபாளத்தில் எங்களால் பாலியல் விடயங்களை நினைத்துப் பார்க்க முடியாது. ஆனால், எங்களுக்கெல்லாம் பாலியல் பற்றி எழுத எவ்வளவோ ஆர்வம். அதேசமயம், நேபாளத்தில் வாழவும் விரும்புகிறோமே..." என்கிறார் தாப்பா.

ஐந்து நாள் மாநாட்டின் முடிவாக எழுத்தாளர்கள் தங்களுக்குள்ள் தொடர்புகளை வலுப்படுத்துவது, தகவல்களைப் பகிர்வது மற்றும் வட்டார மொழியில் இருக்கும் இன்னும் பல நாவல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது என்கிற முடிவோடு சென்றனர்.

✤



# தலைவி நீ தலை நிமிர்...!

எந்த விடயத்தையும் சிறப்பாக நிறைவேற்ற அதைத் திட்டமிட்டுச் செயற்படுத்துவது அவசியமாகும். எம்மால் தேர்ந்தெடுத்து நிர்ணயிக்கப்பட்ட இலக்கையடைய, இடப்பட்ட திட்டத்தை நிறைவேற்ற ஏற்ற ஒழுங்குகளைச் செய்து, செயற்படுத்தல் அடுத்த படிமுறையாகும்.



உங்கள் சிறிய கடையைக் குறித்த இலாபமீட்டும் கடையாக மாற்ற, வரவு - செலவைக் கணக்கிட்டு, எவ்வளவு முதலிட்டு, எப்படி முன்னேற்றுவதென்று திட்டமிட்டுவிட்டீர்கள். அதை எப்படி நிறைவேற்ற வேண்டுமென்றால்- அதற்கேற்ற ஒழுங்குகள் செய்தாக வேண்டும்.

அந்தச் சுற்றாடலில் உள்ளவர்களுக்கு அதிகம் தேவைப்படும் பொருட்கள், காலநிலைக்கேற்ப தேவைப்படும் பொருட்கள் என்பவற்றைத் தெரிந்துகொண்டு தேவையான அளவுகளில் வாங்கி, வாடிக்கையாளரைக் கவர்வதற்குத் தேவையானவற்றைச் செய்து, திட்டத்தை நிறைவேற்ற வழிவகைகளைக் கண்டறிந்து செயற்படுத்த வேண்டும்.

அதேபோன்றே, உங்கள் காரியாலயத்தில் இலக்கை எய்தத் திட்டமிட்டு அதைச் செயற்படுத்தவும், ஏற்ற ஒழுங்குகளைச் செய்து நடைமுறைப்படுத்த வேண்டும். காரியாலயமோ, தொழில்பனமோ, வேறு நிறுவனமோ, எங்கு நீங்கள் பணியாற்று கிறீர்களோ அங்கு நீங்கள் திட்டங்களைத் தீட்டி, அதை நடைமுறைப்படுத்தத் தேவையான ஒழுங்குகளை மேற்கொண்டு செயற்படுத்தவேண்டும்.

வீட்டிலும் உங்கள் திட்டங்களைச் செயற்படுத்தி உங்கள் நோக்கை அடைய நீங்கள் வேண்டியவற்றைச் செய்யவேண்டும்.

உதாரணமாக- உங்கள் மகளுக்கு வயலின் கற்பதில் ஆர்வமிருக்கிறது எனக் கண்டுகொண்டு, அவளை வயலின் மேதையாக்கத் தீர்மானித்து, அதற்காகும் செலவுகளுக்கான திட்டங்களையும் தீட்டிவிட்டால், ஆசிரியரிடம் கற்பதற்கான நேர ஒழுங்குகள், இட ஒழுங்குகளைக் கவனித்து, மகள் இடையூறின்றி வயலின் கற்க ஏற்ற ஒழுங்குகளைச் செய்யவேண்டும். அதில் ஏதாவது பிரச்சினைகள் வரின்- அவற்றை எப்படி நிவர்த்தி செய்து, அவளை வயலின் பயிலவைக்கலாமென்பதைக் கண்டறிந்து, உங்கள் திட்டத்தைச் சிறப்பாக நிறைவேற்ற வழியமைக்கவேண்டும்.

மகள் க.பொ.த சாதாரணதரப் பரீட்சை எழுதப்போகின்றாளென்றால், அவள் சகல பாடங்களிலும் சிறப்பாகச் சித்தியடைய என்னென்ன செய்யவேண்டுமென்று சிந்தித்து, அவற்றைச் செயற்படுத்தவேண்டும்.

வீட்டில் நடைபெறும் வைபவங்களையும் இப்படியே திட்டமிட்டு வெற்றிகரமாக அதன்படி நடத்தினால், வைபவம் 'ஓகோ' எனப் பாராட்டும் வகையில் அமைந்துவிடும்.

அன்றாட வேலைகளான உணவு தயாரித்தல் போன்றவற்றைக் கூட ஏதோ கைபோன போக்கில் செய்யாமல், சிந்தித்து நிறையுணவாக அனைவரும் விரும்பி உண்ணக்கூடியதாத் தயாரிப்பது நல்லதல்லவா?

நோக்கத்தையடைய திட்டமிடுவதைவிட அதைச் சிறப்பாகச் செயற்படுத்துவதிலேதான் வெற்றி தங்கியுள்ளது.

நீங்கள் அழகாக உடை தயாரிப்பவராக இருக்கலாம். ஒரு நாளில் நான்கு சட்டைகளைத் தைத்து முடிக்கக்கூடிய திறமையிருக்கலாம். ஒரு திருமண வைபவத்திற்கு மறுநாள் நான்கு சட்டைகள் தைத்துத் தருமாறு ஒருவர் தந்தபோது, வழமைபோல் ஆற அமர காலையில் எழுந்து, தினமும் செய்வதுபோல் வீட்டுவேலைகள் செய்து, வீட்டிற்கு வந்த தோழியுடன் சும்மா இருந்து ஒருமணிநேரம் ஊர்வம்பு பேசிவிட்டு, இடையிடையே நேரமிருந்தபோது சட்டை தைத்தால் என்னாகும்? சிலவேளை ஒரு சட்டைகூட தைத்து முடியாது. கொடுக்கவேண்டுமே என்று அவசரப்பட்டுத் தைத்தால் சீராகவும், சிறப்பாகவும் அமையாது. அடுத்த தடவை உங்களிடம் சட்டை தைக்கத் தரவேமாட்டார்கள்.

சட்டை தைக்கத் தந்ததுமே அன்றைய வேலைகளை நிரலிட்டு, எப்படி அவற்றை நிறைவேற்றி, நேரத்தை மிச்சமாக்கித் தைக்கலாமெனத் திட்டமிட்டுச் செயற்பட்டிருந்தால், போதிய நேரமெடுத்து அழகாக, குறித்தநேரத்திதல் தைத்துக் கொடுத்துப் பாராட்டுப் பெற்றிருக்கலாம்.

நீ செம்மறி ஆடல்ல. சிந்தித்துச் செயற்படக்கூடிய, செயற் படுத்தக் கூடிய திறமைமிக்கவள். கண்மூடித்தனமாக அன்றாடம் செய்வதுதானே என்ற அலட்சிய பாவத்தில் சிரத்தை அற்றவளாகச் செயற்படாதே.

நீ நான்கு சட்டைகள் தைத்து அதற்கான பயனைப் பெறும்போது, உன் குடும்பமும் பயனடையப்போகிறது. எனவே உன் திட்டத்தை நிறைவேற்ற அவர்களும் உதவவேண்டும். உன் வேலையில் அவர்களும் பங்குகொள்ள வைத்தால், வேலை இலகுவாகிவிடும். வீட்டிலோ, வேலைத்தளத்திலோ எங்கென்றாலும் உன்னைச்சூழ இருப்பவரும் உன் திட்டத்தை நிறைவேற்றும் செயற்பாட்டில் கூட்டாகச் செயற்படச் செய்யவேண்டும்.

தலைவி, நீ அவர்களை எப்படி நெறிப்படுத்தலாம் என்பது உனக்குத் தெரிந்திருக்கவேண்டும். அடுத்து அதைப்பற்றி சிந்திப்போமா?

**யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

குட்டக் குட்டக் குனிபவன் மடையன்.
- *தமிழ்ப் பழமொழி.*

# நமது நோக்கு

## உரிமை பறிக்கும் உயர்பாதுகாப்பு வலயம்

யாழ்.குடாநாட்டிலுள்ள உயர்பாதுகாப்பு வலயங்களில் பொதுமக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக - இந்திய இராணுவ நிபுணர் சதீஷ் நம்பியாரின் இறுதி அறிக்கை இம்மாத இறுதியில் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படவிருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

ஏற்கனவே - உயர்பாதுகாப்பு வலயங்களைத் தளர்த்துவதிலும், அங்கு வாழ்ந்துவந்த மக்களை மீண்டும் அவர்களது பகுதிகளில் மீள்குடியமர்த்துவதிலும் - இராணுவ நலனை முன்னிறுத்தியும், மனிதாபிமானப் பிரச்சினையாக அதனைப் பார்ப்பதைத் தவிர்த்தும் வந்திருக்கும் நம்பியாரிடமிருந்து - நியாயபூர்வமான சிபார்சுகள் கிடைக்குமென்ற எதிர்பார்ப்புக்கள் இல்லாது போயுள்ள நிலையில் - அவரது அறிக்கை தமிழ்மக்களிடம் எந்தவிதமான உணர்வலைகளையும் கிளப்பவில்லை என்றே கூறலாம்.

மாறாக - அரசாங்கம் தனது தரப்பிலிருந்து நம்பியாரின் அறிக்கை தொடர்பாக - முக்கியத்துவத்தைத் தக்கவைக்கும் போக்கிலும், அவரது அறிக்கையை இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கின்ற அரசாங்க - விடுதலைப் புலிகள் பேச்சில் ஆராயவும் தீவிர கவனம் கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

உயர்பாதுகாப்பு வலயங்கள் குறித்து நம்பியார் அளித்த முதற்கட்ட அறிக்கையை ஏற்கனவே விடுதலைப் புலிகள் நிராகரித்துவிட்டிருக்கும்போது - இந்த இறுதி அறிக்கை பேச்சுக்களில், எவ்விதமான எதிர்விளைவுகளைக் கொண்டுவரும் என்பது, அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுமே தெரிந்துவிடும்.

உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாகத் தமது தெளிவான நிலைப்பாட்டை ஏற்கனவே அரசாங்கத் தரப்பிடமும், பகிரங்கமாகவும் அறிவித்திருக்கும் விடுதலைப் புலிகள் - இந்த விவகாரத்தை மக்களது தரப்பில் நின்று - மனிதாபிமானப் பிரச்சினையாகவே நோக்குவார்கள் என்பது தெளிவானது.

தமது சொந்த இடங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு- அகதி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் அவல வாழ்வு வாழ்ந்து வரும் மக்கள், தமது வீடுகளுக்குத் திரும்புவதற்கான அடிப்படை உரிமையை மறுதலித்து- தனது முதற்கட்ட அறிக்கை போலவே, இராணுவ நலனையே நம்பியார் மீண்டும் வலியுறுத்துவாராயின் - அதனை விடுதலைப் புலிகள் எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பது வெளிப்படையானது.

எனவே, நம்பியாரின் அறிக்கை தூசு தட்டப்பட்டுச் சமர்ப்பிக்கப்படுவதன் மூலம் - உயர்பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியேற்ற விடயத்தில் தொடர்ச்சியாக இழுத்தடிப்புக்களை மேற்கொண்டுவரும் அரசாங்கத்தரப்பு - மீண்டும், மற்றொரு இழுத்தடிப்புக்குத் தயாராகிவருமென்றே தமிழ்மக்கள் வலுவான சந்தேகம் கொண்டுள்ளனர்.

உயர்பாதுகாப்பு வுலயங்களுக்கு வெளியிலுள்ள படைநிலைகளை அகற்றி - இராணுவத்தினர் தற்போது நிலைகொண்டிருக்கும் மக்களது குடிமனைகள் மீளக் கையளிக்கப்படுவதான இணக்கப்பாடு பேச்சுக்களில் எட்டப்பட்டும் - அது தொடர்பில், முன்னேற்றகரமான அம்சங்கள் எதுவும் இதுவரை இடம்பெற்றதாகத் தெரியவில்லை. படைநிலைகளை இடமாற்றுவதற்கு முற்படும் போதும் - 'மக்களுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும்' என்று தாமாக நியாயங்கற்பிக்கும் - பொருந்தாத காரணங்களை முன்வைத்து - மக்களது குடியிருப்புக்களுக்குள்ளேயே குந்தியிருப்பதற்கு இராணுவத்தரப்பு தீவிரம் காட்டிவருகின்றது. அண்மையில் - யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான காணிக்குள் படைத்தளம் அமைக்க முற்பட்டதும், மக்கள் எதிர்ப்பையடுத்து அத்திட்டம் ஒத்தி வைக்கப்பட்டிருப்பதும் இவ்வகையானதே.

உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியில் - மக்களுக்குச் சொந்தமான குடியிருப்புக்களிலிருந்து படைநிலைகளை இடமாற்றுவதற்கே இத்தகைய பின்னடிப்புக்களும், பிடிவாதமும் நிலவும்போது - உயர்பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியேற்றத்திற்கு - தமிழ்மக்கள் இன்னும் எத்தனை காலத்திற்கு ஏமாற்றப்பட்டுக்கொண்டே இருப்பார்கள் என்பது அரசாங்கத்திற்கே வெளிச்சமானது.

ஆனால் - அரசாங்கம் அமைதியும் சமாதானமும் என உலகம் முழுவதும் பேசிக்கொண்டு, நிதியுதவிகளையும் பெற்றுக்கொண்டிருக்க - தமிழ் மக்கள் இன்னமும் யுத்தத்தின் கோரப்பிடிக்குள்ளிருந்து அகற்றப்படாமல் அகதிகளாக வாழ்வதும், பிறந்து வளர்ந்த மண்ணுக்கு- உயிராதாரமாகக் கலந்து நிற்கும் சொந்த வீட்டுக்குச் செல்வதற்குத் தடுக்கப்பட்டு நடைப்பிணங்களாக அலைவதும் இனியும் அனுமதிக்கப்படக்கூடியதல்ல.

ஒருபுறம் அமைதியென்றும் - இன்னொருபுறம் தமிழருக்குத் தொடரும் அவலவாழ்வென்றும் - அரசாங்கம் இரட்டை வேடம் புனைவதையும், படைத் தரப்பு தனது இராணுவ நலனுக்காக தமிழ்மக்களின் அடிப்படை உரிமையைப் பறித்தெடுப்பதையும் சர்வதேசம் உணரும் வகையில் எடுத்துச்சொல்லி, நியாயந்தேட வேண்டியவர்களாகவே தமிழ்மக்கள் இன்றுள்ளனர்.

# கிளிநொச்சி சிறான் கூட்டத்தில் திட்ட மதிப்பீடுகள் ஆராயப்படும்

சிறான் அமைப்பின் கூட்டம் எதிர்வரும் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது. இரண்டு நாட்கள் நடைபெறும் கூட்டத்தின் முதல்நாள் அமர்வில்,

இறுதியாக சிறான் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மதிப்பீடு செய்யப்படும். சிறான் பணிப்பாளர், செயலகத்தின் செயற்பாடுகள் குறித்து விளக்கமளிப்பார்.

சிறான் செயலகத்தைப் புனரமைப்புச் செய்வது, வாகனங்களைக் கொள்வனவு செய்வது போன்ற நடவடிக்கைகளுக்கான அங்கீகாரம் இந்தக் கூட்டத்தில் பெறப்படும்.

அத்துடன், மாவட்ட அடிப்படையிலான தேவை மதிப்பீட்டுக் குழுக்களின் செயற்பாடுகள், மாவட்ட தேவை மதிப்பீட்டுக் குழுக்களுக்கு உறுப்பினர்கள், இணைப்பாளர்களை நியமித்தல் பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்படும்.

வட - கிழக்குப் புனர்வாழ்வு நிதியத்தின் செயற்பாடுகள் குறித்தும், சிறான் செயலகத்துக்குச் சுயாதீனமான கணக்காய்வாளரை நியமிப்பது குறித்தும் ஆராயப்படவுள்ள இக்கூட்டத்தில்-

ஜப்பானிடம் நிதியுதவி கோரும் நிலைப்பாடு குறித்தும் பேசப்படவுள்ளது.

விசேட நிபந்தனைகள் பற்றிய அமர்வில் யாழ்.மாவட்டத்துக்கான பௌதீக மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படும். இதில் மீன்பிடி அபிவிருத்தி பற்றியும், மன்னார் மாவட்டத்தில் மீள்குடியமர்வு குறித்த முதற்கட்ட அறிக்கையும் அங்கு சமர்ப்பிக்கப்படும்.

இரண்டாம் நாள் அமர்வில் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரங்கள் பெறப்படும். சிறானின் பரிசீலனைக்கு வந்துள்ள திட்டங்கள், அரசாங்கம் நியமித்துள்ள தேவை மதிப்பீட்டுக்குழுக்கள் சமர்ப்பித்துள்ள திட்டங்கள், அமைச்சுக்கள் அனுப்பியுள்ள திட்டங்கள் முக்கியமாகக் கவனத்தில் எடுக்கப்படும்.

கிளிநொச்சி மருத்துவமனையை ஜப்பானிய உதவியுடன் அமைப்பதற்கான இறுதி அறிக்கையும் இந்தக் கூட்டத்தில் தயாரிக்கப்படும்.

அடுத்த உபகுழுக் கூட்டம் நடைபெறுவதற்கான இடம் மற்றும் திகதி என்பனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

## ஆலயங்களில் இருந்து படையினர் வெளியேறுமாறு மக்கள் ஊர்வலம்!

மட்டக்களப்பிலுள்ள பல இந்து ஆலயங்களை விட்டுப் படையினர் இன்னமும் வெளியேறாததைக் கண்டித்து எதிர்வரும் 26 ஆம் திகதி கண்டன ஊர்வலமொன்று நடாத்தப்படவுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒரு வருடம் பூர்த்தியாகியும் படையினர் இந்து ஆலயங்களிலுள்ள முகாம்களைவிட்டு வெளியேறவில்லை.

எனவேதான் கண்டன ஊர்வலத்தை நடத்தவுள்ளதாக மட்டக்களப்பு இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் க.ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

# கைதான நக்கீரன் கோபால் மீது பொடா சட்டத்தின் கீழ் வழக்கு!

தமிழகத்திலிருந்து வெளிவரும் 'நக்கீரன்' வாரஇதழ் ஆசிரியரான கோபால் மீது தமிழக அரசு பொடா சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

வீரப்பனுக்கு ஆயுதங்களைக் கடத்திச் சென்று கொடுத்தது, தமிழகத்தைப் பிரிக்க முற்பட்டமை போன்ற பல குற்றச்சாட்டுக்கள் இவர் மீது பொடா சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்டுள்ளன.

கடந்த வாரம் கைதுசெய்யப்பட்ட நக்கீரன் கோபால் மீது தமிழக அரசு பொடா சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுக்க நடவடிக்கை எடுத்ததற்கு மனிதஉரிமை அமைப்புக்கள், அரசியற்கட்சிகள், தொழிற்சங்கங்கள், பத்திரிகையாளர் சங்கங்கள் எனப் பல்வேறு தரப்புக்களிலிருந்தும் கண்டனம் எழுந்துள்ளது.

தி.மு.க தலைவர் கலைஞர் மு.கருணாநிதி - நக்கீரன் கோபால் மீது பொடா சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதற்குக் கடும் கண்டனம் தெரிவித்திருப்பதுடன், தமிழக அரசு தனது முடிவை மாற்றிக்கொள்ளாவிட்டால் தமிழகம் தழுவிய போராட்டங்களை நடத்த நேரிடும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, பொடா சட்டத்தின்கீழ் கைதாகித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோ - நக்கீரன் கோபால் கைதானதைக் கண்டித்ததுடன், உடனடியாகத் தமிழக அரசு மீது நடவடிக்கை எடுக்கும்படியும் கோரி பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி ஆகியோருக்கு அவசர கடிதம் அனுப்பியுள்ளார்.

தமிழகத்தில் இதுவரை 41 தமிழ் உணர்வாளர்கள் பொடா சட்டத்தின் கீழ் கைதாகித் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தெணியான் மணிவிழாவும் மலர் வெளியீடும் இன்று

பிரபல எழுத்தாளர் தெணியானின் மணிவிழா இன்று காலை 9 மணிக்கு வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) தலைமையில் இடம்பெறும் இந்த விழாவில் வாழ்த்துரைகளை - கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்), கவிஞர் சி.முருகையன் ஆகியோர் வழங்குவர்.

மணிவிழா மலரை கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) வெளியிட்டுவைப்பார். பாராட்டுரைகளை விரிவுரையாளர் த.கலாமணி, பேராசிரியர் சபா.ஜெயராசா, கவிஞர் சோ.பத்மநாதன், பேராசிரியர் ந.ஞானக்குமரன், கலாநிதி எஸ்.சிவலிங்கராசா, சி.வன்னியகுலம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இதேவேளை, தெணியான் மணிவிழாவும், மலர் அறிமுகமும் நாளை பி.ப. 3 மணிக்கு கொற்றாவத்தை பூமகள் சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# எயிட்ஸ், சயரோகம், மலேரியா நோய் ஒழிப்புக்கு 20 மில். டொலர்!

## உலக வங்கி வழங்குகிறது

எயிட்ஸ், சயரோகம், மலேரியா ஆகிய மூன்று நோய்களையும் ஒழிக்கவென உலக வங்கி இலங்கைக்கு இருபது மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளன.

12.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை உலக வங்கி- இலங்கைக்கு எயிட்ஸ் ஒழிப்புக்கென வழங்கியுள்ளது. தெற்காசிய நாடொன்றுக்கு உலக வங்கி இந்தளவு நிதி வழங்கியிருப்பது இதுவே முதல் தடவையென உலக வங்கியின் கொழும்பு அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள நிதியின் ஊடான வேலைத் திட்டங்களை மேற்பார்வை செய்யவென உலக வங்கியின் தலைமையகம் செயலணித் தலைவர் ஒருவரையும் நியமித்துள்ளது. இவர் நேற்று வொஷிங்ரனிலிருந்து கொழும்பு வந்து சேர்ந்தார்.

இலங்கையில் எயிட்ஸை ஒழிக்கவென உலக வங்கி வழங்கியுள்ள நிதிக்கான வேலைத்திட்டங்கள் - சுகாதார, போஷாக்கு, பாதுகாப்பு, கல்வி, தொழில் நலன்புரி ஆகிய அமைச்சுக்கள், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் ஊடாக முன்னெடுக்கப்படும்.

அதேவேளை எயிட்ஸ், சயரோகம், மலேரியா ஆகியவற்றுக்கெதிரான உலகளாவிய நிதியம் இம்மூன்று நோய்களையும் ஒழிக்கவென இலங்கைக்கு 6.4 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# பௌதீக, சூழல் வளப்பாதுகாப்புக்கு மதியுரைஞர் குழு அமைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் பௌதீக வளங்களையும், சுற்றுச் சூழலையும் பாதுகாக்கும் பொருட்டு யாழ்.மாவட்ட சூழல், சுற்றாடல், பாதுகாப்பு, கட்டடத் தொழில்நுட்ப மதியுரைஞர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

யாழ். அரச செயலகத்தில் நேற்று நடைபெற்ற மணல் விநியோகம் சம்பந்தமான விசேட கலந்துரையாடலில் மேற்படி குழு அமைக்கப்பட்டது.

இக்குழுவில் அரச கூட்டுத்தாபனங்களைச் சேர்ந்த பொறியியலாளர்கள் மற்றும் தனியார் பொறியியலாளர்கள், கட்டட உத்தியோகத்தர்கள் ஆகியோர் அங்கம்வகிக்கவுள்ளனர்.

இக்குழுவின் முதலாவது கூட்டம் யாழ். அரச செயலகத்தில் வரும் புதன்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. இக்கூட்டத்தின்போது தற்போது கட்டடத் தொழிலாளர்கள், தச்சுத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு நிலவும் பற்றாக்குறையினை நீக்குமுகமாகப் புதிதாகக் கட்டடத் தொழிலாளர்களையும், தச்சுத் தொழிலாளர்களையும் பயிற்றுவிப்பது தொடர்பாகவும் - தற்போது தொழிலில் ஈடுபடும் கட்டட மற்றும் தச்சுத் தொழிலாளர்களுக்குக் கருத்தரங்குகள் நடத்துவது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

அத்துடன், எதிர்காலத்தில் வீட்டுத்திட்டங்கள் தொடர்பான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு முன்னேற்பாடாகத் தரவுகளைச் சேகரிக்கும் பணியிலும் இக்குழு ஈடுபடவுள்ளது. கட்டடங்களை அமைக்க விரும்பும் மக்களுக்குப் போதிய அறிவுரைகளை வழங்குவதுடன், வீட்டு அமைப்பின் மாதிரி வரைபடங்களையும் வரைந்து கொடுக்கும் நடவடிக்கைகளிலும் இக்குழு ஈடுபடவுள்ளது.

இக்குழுவின் அலுவலகம் யாழ். அரச செயலகத்தினுள் அமைவதுடன், எதிர்காலத்தில் மேற்படி விடயங்கள் தொடர்பாக இக்குழுவே நடவடிக்கை எடுக்கவுள்ளது. (லி,09)

# அநீதியை வென்று நீதியை நிலை நிறுத்திய மாபரன் மரணித்த மகிமையின் புனித நாள்

உலக மக்கள் அனைவரும் சகல அடிமைத்தனங்களின்று விடுதலை பெற்று, மனித மாண்புடன் இறைபாதையில் பயணிக்க வேண்டித் தமது இன்னுயிரை கல்வாரி உச்சியிலே இயேசு அர்ப்பணித்த புனித வெள்ளி இன்றாகும்.

பெலிக்கான் பறவை தன் குஞ்சுகளுக்குத் தனது இரத்தத்தையே உணவாக அளிக்குமாம். ஆனால், தன் நண்பனுக்காக தன்னுயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு வேறேதும் இல்லையென்று உரைத்த இயேசு, தன்னையே தற்கொடையாக உவந்தளித்தார். மோயீசன் பாலைவனத்தில் பாம்பை உயர்த்தியதுபோல் மனுமகனும் உயர்த்தப்பட வேண்டும் என்னும் முன்னறிவித்தலின்படி, மூன்று ஆணிகளில் மும்மணி நேரம் சிலுவையில் தொங்கி வானகத்தந்தைக்குத் தம்மைப் பலியாக்கிய அன்பின் உச்சக்கட்டத்தை வெளிப்படுத்திய தியாகத்தின் நாள் இன்றாகும். அவமானத்தின் சின்னமாகிய சிலுவை - பாஸ்கா செம்மறியான கிறிஸ்து அதன் மேல் பலியிடப்பட்டதால் புனித சின்னமாகப் போற்றி வணங்கத்தொடங்கிய மகிமையின் நாள் இது. இக் கல்வாரிப்பாதையிலே பல துன்பியல் நிகழ்வுகளும், அன்பியல் பதிவுகளும் இடம்பெற்றன. இவற்றில் நாம் எவற்றைப் பின்பற்றுகிறோம்? 2000 ஆண்டுகளுக்கு முன் "கொல் கொத்தாவில்" அரங்கேறிய சம்பவங்கள் இன்றும் உலகெங்கும் மனித வாழ்வியல் ஊடாகக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

30 காசுக்காக மாசற்ற திரு இரத்தத்தை முத்தமிட்டுக் காட்டிக் கொடுத்தான் யூதாஸ். இன்று தப்பேதும் செய்யாதோரை சுயநல வாதத்தால் திட்டமிட்டுக்காட்டி கொடுப்பது நவீன யூதாசுகள் இல்லையா? பிலாத்து கைகழுவி மரணத்தீர்ப்பிட்டு யூதரிடம் ஒப்படைத்தான் - இன்று அவனுக்கும் அப்படித்தான் நிகழவேண்டும்.... இவருக்கு இதுவும் போதாது ..... நீதான் குற்றவாளி ....... என்று தீர்ப்பிடும் பிலாத்துகள் எத்தனை? தமது பாவத்தைப் பாரச்சிலுவையாக்கி இயேசுவின் தோள்மீது சுமத்தினர். எமது குறைகளை, தவறுகளை, பழிகளைப் பிறர்மீது சுமத்தும் மனிதர்கள் எத்தனை?

அன்று மீட்பரை "சிலுவையில்" அறைந்து கொல்லவேண்டும். என்று கூக்குரலிட்டனர். இன்று அநீதியை, ஆக்கிரமிப்பை, பகைமையை, அடக்குமுறையை ஆதரித்துக் கோஷங்கள் எழுப்பப்படவில்லையா? சாட்டையால் அடித்து முள்முடியைத் தலையில் அழுத்தினர். எமது சொல், செயலால் பிறரது வாழ்வில் அடித்து மன அழுத்தங்களை உருவாக்கவில்லையா? இறைமகனின் ஆடைகளைக் களைந்து அவமானப்படுத்தினர். பெண்ணினத்தை இம்சைப்படுத்தி, அயலவரை வசைபாடி அவமானப்படுத்தும் நிலைகள் இல்லையா?



மூவுலகாளும் இறையரசரை மூன்று ஆணிகளால் அறைந்தனர். இன்று முழு உலகிலும் குண்டுகள் பொழிந்து மனித உயிர்கள் அழிக்கப்படுகின்றன. "தாகமாய் இருக்கிறேன்" என்றபோது புளித்த காடியைக் கொடுத்தனர். இன்று ஒரு வேளைக்கஞ்சிக்கு ஒரு சாரார் ஏங்க, மூக்குமுட்ட மது அருந்திச் சமூகத்தைச் சீரழிப்போர் எம்மில் ஏராளம். இறந்தபின்னும் விலாவினைக் குத்தித் திறந்தனர். இன்று ஒருவர் இறந்தபின்னும் அவரது பழைய வாழ்வின் நிலைகளைக் குத்தித் திறந்து தூற்றும் வாய்கள் எத்தனை?

## இன்று பெரிய வெள்ளி

இச்செயற்பாடுகள் அனைத்தும் இயேசுவின் அவமானப்பாடுகளையும், சிலுவையின் கனத்தையும், மரணத்தின் கொடூரத்தையும் அதிகரிப்பதாகவே அமையும். மாறாகக் கல்வாரிப்பயணத்தில் தடம்பதித்த நற்செயல்களையும், அன்பையும், பரிவையும் எமது வாழ்வில் முன்னெடுத்து செயலாற்றுவோம்.

கைதுசெய்ய வந்தவரின் காது வெட்டப்பட்டபோது, அதை மீண்டும் இயேசு பொருத்தியது, பகைவனிடத்திலும் அன்பு காட்டு என்று உணர்த்தியது. சீரோன் சீமோன் சிலுவை சுமக்க உதவியது, பிறர் சுமையில் துன்பத்தில் பங்குகொள் என்று வலியுறுத்தியது. ஜெருசலேம மகளிருக்கு ஆறுதல் கூறியது, பிறர் துயரைப் புரிந்து தேற்றிடும் பண்பைக்காட்டுகிறது. திருமுகத்தைத் துடைத்தபோது துணியில் திருமுகம் பதித்தது, செய்நன்றிக்குப் பிரதியுபகாரமானது. யேசுவின் ஆடைகளைச் சீட்டுப்போட்ட சம்பவம், மேலாடையைக் கேட்பவனுக்கு உள்ளாடையையும் கொடு என்பதை எடுத்துச் சொன்னது. "பிதாவே இவர்கள் அறியாது செய்கிறார்கள். இவர்களை மன்னியும் என்று கூறியது" எதிரியையும் மன்னிக்கும் மனப்பக்குவத்தையும், இறையன்பின் வெளிப்பாட்டையும் காட்டியது.

விலாவைக் குத்திய வீரன் பார்வை பெற்றது, இறப்பில்லா இறைவனின் இறுதித்துளிச் செந்நீரும் நிலை வாழ்வளிக்கும் அருமருந்தானது. 'தந்தையே உமது கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்' என்றது, இறை திட்டத்திற்குக் கீழ்ப்படிவுக் குறிக்கோளை நிறைவேற்றிய திருப்தியைத் தந்தது.

இவ்வாறு பல துன்பகரப்பாடுகளை ஏற்று எமக்காகக் கிறிஸ்து மரணித்த இந்நாளில் மனிதத்திற்கு எதிரான எமது செயற்பாடுகளைக் களைந்து, இறைவிழுமியத்தின் பாதையிலே பயணிப்போம். எமது பாவங்களுக்கும் - பரிகாரமாக எமது நாளாந்த சிலுவைகளைப் பொறுமையோடு சுமந்து சென்று எமது துர்க்குணங்களைச் சிலுவையில் அறைவோம். கிறிஸ்துவுக்குள் இறப்போம். புது மனிதராய் மானுடம் புதிய பாதையிலே உயிர்ப்படைய எம்மை அர்ப்பணித்து உழைப்போம். இறைவனின் சமாதானத்தைப் பகிர்ந்து வாழுவோம்.

- எஸ்.யேசுதாஸ் -

# திலீபன் மருத்துவப் பிரிவின் பத்தாவது மருத்துவ முகாம்

## புளியங்குளத்தில் நடத்த ஏற்பாடு

வன்னி மாவட்டத்தில் தியாகி திலீபன் மருத்துவப் பிரிவினர் தமது 10 ஆவது மருத்துவ முகாமைப் புளியங்குளத்தில் நாளை ஆரம்பிக்கவுள்ளனர்.

இம்மருத்துவப் பிரிவினர் மன்னார் அடம்பன் பகுதியிலும் முல்லைத்தீவு மாவட்டத்திலும், பூநகரியிலும், ஆழியவளையிலும், மாங்குளத்திலும் மக்களுக்கு இலவச மருத்துவ சேவையை வழங்கி வருகின்றனர்.

இதேவேளை, பின்தங்கிய கிராமங்களில் வாழும் மக்களுக்கும் கால ஒழுங்கின்படி தமது மருத்துவ சேவையை இப்பிரிவினர் வழங்கிவருகின்றனர். இதுவரை ஆயிரக்கணக்கான மக்கள் திலீபன் மருத்துவ சேவை முகாமில் சிகிச்சை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இளைஞர் குழுக்களிடையே கொழும்புத்துறையில் மோதல்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறையில் சில இளைஞர் குழுக்களின் அடாவடித்தனங்கள் கடந்த சில நாட்கள் அதிகரித்துள்ளது.

குறிப்பிட்ட பகுதிகளைச் சேர்ந்த சில இளைஞர்கள் - குழுக்களாக இணைந்து ஏனைய குழுக்களுடன் கைகலப்புக்களில் ஈடுபடுகின்றனர். அவர்களால் தூக்கி வீசப்படும் மணல் நிரம்பிய போத்தல்கள், பல்புகள், சைக்கிள் செயின், கற்கள் என்பனவற்றால் அருகே இருக்கும் வீடுகளின் யன்னல் கண்ணாடிகள் சேதமடைகின்றன.

அத்தோடு குறிப்பிட்ட ஒரு குழு- மற்றைய குழுவைச் சேர்ந்த இளைஞரின் வீட்டினுள் நுழைந்து, வீட்டு உடமைகளைச் சேதப்படுத்தியும், வீட்டிலுள்ளவர்களைத் தரக்குறைவாகப் பேசியும் வருகின்றனர். இவர்களது கைகளில் கூரியவாள், சைக்கிள் செயின் போன்ற ஆயுதங்களைக் காணும் பொதுமக்கள், இதனால் தமக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்கின்ற காரணத்தினால், இவற்றில் தலையிடவும் அஞ்சுகின்றனர்.

மேலும் இரவு வேளைகளில் மது போதையில் அலையும் இவ்விளைஞர் குழுவினர், வீட்டுக் கதவுகளை எடுத்து அடுத்த வீட்டு வாயில்களில் எறிந்துவிட்டும் செல்கின்றனர்.

இதனால் அயலவர்கள் மத்தியில் தேவையற்ற பெரும் வாக்குவாதங்களும் இடம்பெறுகின்றன.

(சு)

# கொட்டடியில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு எக்கோ நிறுவனம் உதவி வழங்குகின்றது

கொட்டடி முத்தமிழ் வீதிப் பகுதியில் கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு மீளக்குடியமர்வோருக்குக் கியூடெக் 'எக்கோ' நிறுவனம் உதவிகளை வழங்கிவருகின்றது.

சேதமடைந்த வீடுகளில் 2 அறைகளுக்குக் கூரைகள் அமைத்துக் கொடுப்பதுடன், முற்றாகச் சேதமடைந்த வீடுகளுக்கு 2 அறைகள் அளவிலான - ஆறு தூண்களுடனான கூரைகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுவருகிறது.

முத்தமிழ் சனசமூக நிலையம் ஊடாக மேற்கொள்ளப்படும் இந்த உதவித்திட்டத்தில் முதற்கட்டமாக 49 குடும்பங்கள் நன்மை பெறவுள்ளன.

# புத்தூர் சந்திப் பகுதிக்கு இன்னும் மின்சாரம் இல்லை

மீசாலை, புத்தூர் சந்தியில் கனகன்புளியடி வீதியிலுள்ள குடியிருப்புக்களிற்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை என இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மின்சாரசபையிடம் பல தடவை தமக்கு மின்சாரம் வழங்குமாறு இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

எனினும், மின்சாரசபையினர் இப்பகுதிக்கு மின்வழங்க முன்வரவில்லை. தமது பகுதிக்கு மின் வழங்காமையையிட்டு மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

# சிறுவர் தொடர்பான குழுவின் மதிப்பீடுகள் இடம்பெற்றன

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு அமைப்பும், பிரித்தானியப் பேரவையும் இணைந்து சிறுவர் தொடர்பாடல் குழுவில் அங்கத்துவத்தைப் பெற்ற மாணவர்களின் செயற்பாடுகள் தொடர்பான மீளாய்வு நிகழ்வு - பிரித்தானியப் பேரவையைச் சேர்ந்த வீரக்கொடி என்பவரால் நடத்தப்பட்டது. நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந் நிகழ்ச்சியில் 50 வரையான மாணவர்கள் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வினை நடத்திய பிரித்தானியப் பேரவையினைச் சேர்ந்த வீரக்கொடி கருத்துத் தெரிவித்தபோது,

இத்திட்டம் சிநேகபூர்வமான, பொருத்தமான சூழலில் அறிவினைப் பகிர்ந்துகொள்வதற்கும், தொடர்புகளை மேற்கொள்வதற்கும், தகவல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துபவருடனான தொடர்புகளைக் கிராமிய மற்றும் பின்தங்கிய சிறுவர்களுக்கு வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டது.

ஒவ்வொரு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களையும் நேருக்குநேர் சந்திக்க வைத்து அவர்களை சிநேக பூர்வமாகப் பழகவிடுவதன் மூலம் இத்திட்டத்தின் பிரதான நோக்கத்தினை அடையமுடியும். தற்பொழுது எமக்கு அவ்வாறான ஒரு நிலையே தேவை என்றும் தெரிவித்தார்.

(13,53)

## வங்களாவடிச் சந்தியில் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

தீயாக தீபம் அன்னை பூபதியின் 15ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வங்களாவடிச் சந்தியில் - வேலணை வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வங்களாவடிச் சந்தியும் அதனைச் சூழவுள்ள பகுதிகளும் துப்பரவு செய்யப்படுவதுடன் இப்பகுதிகள் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

(லி)

# உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர் எண்ணிக்கை வீழ்ச்சி!

(கொழும்பு)

கடந்த வருடத்தைவிட கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கை இம்முறை கணிசமாக வீழ்ச்சியடைந்திருப்பதாகப் பரீட்சை ஆணையாளர் மகிந்த விஜயசிறி தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் 2 லட்சத்து 61 ஆயிரம் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இந்த வருடம் 2 லட்சத்து 51 ஆயிரம் மாணவர்களே பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

பாடசாலைப் பரீட்சார்த்திகளின் தொகை கடந்த வருடத்தைவிட இவ்வருடம் வீழ்ச்சி கண்டுள்ளது. கடந்த வருடம் 2 லட்சத்து 27 ஆயிரம் பாடசாலைப் பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

இந்தவருடம் 2 லட்சத்து 12 ஆயிரத்து 194 பேரே பாடசாலைகள் மூலம் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். அதேவேளை, தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை கடந்த வருடம் 33 ஆயிரத்து 900 ஆக இருந்தது. இவ்வருடம் இந்தத் தொகை 39 ஆயிரத்து 533 ஆக அதிகரித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை வீழச்சியடைந்திருப்பது முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியதொரு விடயம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.


அதேவேளை, கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சையில் இம்முறை தோற்றும் மாணவர்கள் கட்டாயமாகத் தேசிய அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும் என அவசியமில்லை என்று பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டையை அல்லது அஞ்சல் அடையாள அட்டையைச் சமர்ப்பிக்கலாம். இல்லாவிட்டால் கிராம அலுவலரின் உறுதிப்படுத்தும் கடவுச்சீட்டுக்கான அளவு புகைப்படப் பிரதியைச் சமர்ப்பித்தும் பரீட்சை மண்டபத்தில் நுழையலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பரீட்சைகள் முடிவடைவதற்கு முன்னரே விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மே 8 ஆம் திகதிமுதல் ஜூன் 10 ஆம் திகதிவரை மூன்று கட்டங்களாக விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மூன்று வலயங்களாக ஈராக் பிரிக்கப்படும்

## அமெரிக்கப் படைகள் திட்டம்



பக்தாத் சிறுவருடன் அமெரிக்கப் படையதிகாரி.

ஈராக் மீதான போருக்காக இதுவரையில் அமெரிக்கா 20 பில்லியன் டொலர்களைச் செலவிட்டுள்ளதாக பென்ரகன் அறிவித்துள்ளது. இதேசமயம், ஈராக்கில் நிர்வாக வசதிக்காக அமெரிக்கா இராணுவத் தலைமையகம் ஒன்றை அமைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கில் உள்ள படையினரின் பராமரிப்புக்காக மாதாந்தம் 2 பில்லியன் டொலர் செலவாகும் என பென்ரகன் எதிர்பார்க்கிறது. எனினும், அவ்வளவு படையினரை எவ்வளவு காலத்துக்கு ஈராக்கில் தங்க வைத்திருப்பது என்பதை இப்போது தீர்மானிக்க்முடியாது என அமெரிக்க மூத்த படையதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை - ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படைகளின் தளபதி ஜெனரல் ரொமி பிராங்ஸ், ஈராக்கை மூன்று வலயங்களாகப் பிரித்து நிர்வகிக்க திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடஈராக்கின் குர்திஷ் சிறுபான்மையினர் வசிக்கும் பகுதியை ஒரு வலயமாகவும், தலைநகர் பக்தாத் உட்பட சுனி முஸ்லிம்கள் வதியும் பகுதியை ஒரு பிரதேசமாகவும், சியா முஸ்லிம்கள் அதிகம் வாழும் தென் ஈராக்கை மற்றுமோர் வலயமாகவும் பிரித்து, ஒவ்வொரு வலயங்களுக்கும் முறையே அமெரிக்க இராணுவம்,



அமெரிக்க மரைன் இராணுவப் பிரிவு, பிரிட்டிஷ் இராணுவம் என்பனவற்றை நிறுத்தி வைக்க அமெரிக்கப் படை அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

# ஈராக் புனரமைப்பில் ஐ. நாவும்; ஐரோப்பிய யூனியன் கோரிக்கை

ஈராக்கின் மறுசீரமைப்பில் ஐ.நா. சபையே முக்கிய பங்கு வகிக்க வேண்டுமென, ஏதென்ஸ் நகரில் கூடிய ஐரோப்பிய யூனியன் தலைவர்கள் கூட்டாகக் கோரியுள்ளனர்.

அமெரிக்கப் படைகள், சட்டம் ஒழுங்கை விரைவில் ஈராக்கில் அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமெனவும், அதன்பின் ஈராக்கின் அபிவிருத்திக்கு ஐரோப்பிய யூனியன் உதவும் எனவும் அத்தலைவர்கள் தெரிவித்துள்ளனர். எனினும், இவ் விடயங்களில் பிரிட்டன் கருத்து



பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயருடன் பிரான்ஸ் ஜனாதிபதி ஷிராக்.

முரண்பாடு கொண்டிருப்பது, ஐரோப்பிய யூனியனில் - ஈராக் தொடர்பாகப் பிளவுகள் ஏற்படும் சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

ஈராக் மீதான ஐ.நா. தடையை நீக்க அமெரிக்கா இனி முன்வர வேண்டுமென, பிரான்ஸ் ஜனாதிபதி ஷிராக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேசமயம், ஐரோப்பிய யூனியனின் புதிய ஒப்பந்தத்தின்படி 2004 இல் அதில் மேலும் 10 புதிய நாடுகள் உறுப்புரிமை பெற வழிவகுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சைப்பிரஸ், செக் குடியரசு, எஸ்தோனியா, ஹங்கேரி, லத்வியா, லிதுவேனியா, மோல்ரா, போலந்து, ஸ்லோவேகியா, ஸ்லோவேனியா என்பனவே புதிதாக இணையவுள்ள நாடுகளாகும்.

# மிக நவீன ரகக் குண்டுகளையே அமெரிக்க விமானப்படை வீசியது!

1991 இல் வளைகுடாப்போரில் அமெரிக்க விமானப்படையின் பங்களிப்பைவிட, தற்போதைய ஈராக்கியப் போரில் அமெரிக்க விமானப்



அதி நவீனரக அமெரிக்க ஹெலிகொப்ரர்கள்.

படையின் பங்களிப்பு ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தபோதும், மிக நவீன ரகக் குண்டுகளை இம்முறையே விமானப்படை அதிகமாகப் பயன்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1991 இல் அமெரிக்க விமானப் படை, 120 ஆயிரம் தடவை பறப்பில் ஈடுபட்டு 40 ஆயிரம் தடவை தாக்குதல் நடத்தியது. 265 ஆயிரம் குண்டுகள் வீசப்பட்டன.

ஆனால், அண்மைய ஈராக்கியப் போரில் 41 ஆயிரம் பறப்புக்களில் 15 ஆயிரம் தடவை தாக்குதல் நடத்திய அமெரிக்க விமானப்படை, 27 ஆயிரம் குண்டுகளை மட்டுமே வீசியது.

எனினும், இம்முறை 65 சதவீதம் நவீனரகக் குண்டுகளை மட்டுமே அமெரிக்கா வீசியிருக்கிறது.

1991 இல் செயற்கைக்கோள் வழிகாட்டும் குண்டுகளோ ஏவுகணைகளோ அமெரிக்க விமானப் படையால் பயன்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகவலம்

### கிர்குக் நகரில் பாரிய மனித புதைகுழி

வட ஈராக் நகரான கிர்குக் அருகே, சுமார் 2000 மனிதப் புதைகுழிகளைக் கண்டுபிடித்துள்ளதாக, குர்திஷ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

1980 களில் நடைபெற்ற குர்திஷ் சிறுபான்மை இனத்தவர்களின் கிளர்ச்சியைக் கொடூரமாக அடக்கிய ஈராக்கியப் படைகள், ஆயிரக்கணக்கான குர்திஷ் மக்களைக் கொன்று புதைத்தனர்.

இப்புதைகுழிகள், பழைய ஈராக் படைமுகாம்கள் அருகே காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குர்திஷ் இன மக்களின் கிளர்ச்சியில் சதாம் நச்சுவாயு பிரயோகித்தே அதனை அடக்கியிருந்தார். இதனால் ஏராளமான பொதுமக்கள் தாக்குதலில் மரணிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

அண்மையில் பஸ்ரா அருகே பிரிட்டிஷ் விமானப்படையின் குண்டுவீச்சில் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சதாமின் நெருங்கிய சகாவான 'கெமிக்கல் அலி' என்பவரே குர்திஷ் இன மக்கள் மீதான நச்சுவாயுத் தாக்குதலுக்கு பொறுப்பாவிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குர்திஷ் இன மக்கள் ஈராக் - துருக்கி எல்லைப்பகுதிகளில் அதிகமாக வாழ்கின்றனர். இவர்கள் வட ஈராக்கின் குர்திஷ்தான் என்ற தனி நாட்டை அமைக்க போராடி வருவதும் குறிப்பிடத்தக்கது.


# சிரிய ஜனாதிபதிக்கும் அமெரிக்கா சவாலாகியது




சிரியாவின் புதிய இளம் ஜனாதிபதி அசாத்துக்கு அமெரிக்காவினது அச்சுறுத்தல் பெரும் தலைவலியாக மாறி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அசாத், 2000 ஆம் ஆண்டு ஜூன் மாதம் - திறமைவாய்ந்த அரபுலகின் தலைவரும் அவரின் தந்தையுமான ஹபீஸின் பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டவராவார்.

ஆனாலும், தந்தையின் வழிகாட்டல்களுடாக அனுபவங்களைப் பெற்ற அசாத், நிலைமைகளை சுலபமாகக் கையாளக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாக மத்திய கிழக்கு ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்.




ஈராக்கிய ஏவுகணையொன்றால் தாக்கப்பட்ட அமெரிக்க விமானத்தை சீரமைப்பது பற்றி தீவிர ஆலோசனையில் அமெரிக்கப் படைகள்.



குவைத்தில் மார்ச் மாதம் அமெரிக்கப் படையினர்மீது அந்நாட்டுச் சிப்பாய் ஒருவராலேயே நடத்தப்பட்ட கிரனைட் தாக்குதலில் படுகாயமடைந்து பின்னர் பலியான அமெரிக்க மேஜரின் இறுதிச் சடங்கு.



கைதான ஈராக்கியருக்கு குடிநீர் விநியோகம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சூழல் பாதுகாப்பினைப் பேண புலிகள் முழு ஆதரவு தருவர்

## யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

தற்போதைய சமாதானச் சூழ்நிலையில், யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் நிர்மாணப் பணிகளுக்குத் தேவையான கற்களை, காங்கேசன்துறையிலிருந்தும், வவுனியாவிலிருந்தும் பெற்றுக்கொள்வது குறித்து, நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற சூழல் பாதுகாப்பு மாநாட்டில் ஆராயப்பட்டது.

இம்மாநாட்டில் - அரச திணைக்கள அதிகாரிகள், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, சூழல் பாதுகாப்புப் பிரிவினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பின்போது - உட்கட்டுமானப் பணிகளுக்காக, உயர் பாதுகாப்பு வலயமான காங்கேசன்துறை பகுதியிலிருந்து கல்லையும், நாகர்கோவில் ராஜன் நகரிலிருந்தும் பூநகரி, கச்சாய் பகுதிகளிலிருந்தும் மணலைப் பெற்றுக்கொள்வது குறித்தும் ஆராயப்பட்டது.

சூழல் பாதுகாப்புக் குறித்த ஆலோசனைக் குழுவொன்றும், அடுத்த வாரம் முதல் யாழ். செயலகத்தில் இயங்கவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பங்குபற்றிய யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி - எமது சூழலில் பாதிப்பை ஏற்படுத்தி குறுகிய நோக்கத்தில் இலாபம் பெறும் நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு, சிலர் ஒத்துழைப்பு வழங்கி வருவதால், எமது பிரதேசத்தில் பெரியதோர் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதைத் தடுப்பதற்கு, சூழல் பாதுகாப்புப் பிரிவினருக்கு விடுதலைப் புலிகளாகிய நாம் ஆதரவை வழங்குவோம். சூழல் சீரழிவதைத் தடுப்பதற்கு எம்மாலான நடவடிக்கையை எடுப்போம் என்றார். (09,லி)

# கிரிக்கெட் அணித்தலைவராக ஹர்ஷான் திலகரட்ன தெரிவு

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் டெஸ்ட் குழுத் தலைவராக, ஹர்ஷான் திலகரட்ண நேற்று தெரிவு செய்யப்பட்டார். கொழும்பில் கூடிய இலங்கை கிரிக்கெட் தெரிவுக்குழு இத்தெரிவை மேற்கொண்டது.

அதேசமயம், இலங்கை அணியின் ஒருநாள் போட்டிக்கான அணியின் தலைவராக, மார்வன் அத்தப்பத்து தெரிவாகியுள்ளார். மார்வன் அத்தப்பத்து டெஸ்ட் அணியின் உப தலைவராகவும் விளங்குவார்.

அணியின் தலைவர் பதவியிலிருந்து அண்மையில் சனத் ஜெயசூரிய விலகியதைத் தொடர்ந்தே இப்புதிய தெரிவுகள் இடம்பெற்றுள்ளன. (01)

# தொண்டராசிரியர் நியமனம் ஏப்ரல் இறுதிவரை அவகாசம்

## தமிழர் ஆசிரியர் சங்கம் நேற்று அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தொண்டராசிரியர் விவகாரம் தொடர்பாக, மே மாதம் முதலாம் திகதிக்குள் தமக்கு முடிவு கிடைக்காதுவிடின், பாரியளவிலான வெகுஜனப் போராட்டம் ஒன்றினை வடக்கு - கிழக்குப் பகுதியில் மேற்கொள்ளவிருப்பதாக, நேற்றைய்தினம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தமிழராசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், அண்மையில் கூட்டமைப்பினர் பிரதமர் ரணிலைச் சந்தித்தபோது, சட்டமா அதிபரின் அறிக்கையைக் கோரியது தேவையற்ற ஒன்று. அதனை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும், கூட்டமைப்பினர் - பிரதமர் சந்திப்பையடுத்து பரீட்சைப் பகிஷ்கரிப்பை நாம் கைவிடத் தீர்மானித்துள்ளோம்.

சிங்களப் பிரதேசங்களுக்குக் கூடியளவு தொகையில் ஆசிரியர்களையும், தமிழ்ப் பிரதேசங்களில் குறைந்தளவு ஆசிரியர்களையும் வழங்கி, திட்டமிட்டமுறையில் எமது கல்வியினை அரசாங்கம் சீரழித்துச் செல்கின்றது. சிங்கள இடங்களில் ஆசிரியர்கள் மேலதிகமாகவுள்ளனர். ஆனால், எமது வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரையில் 10,000 ஆசிரியர்கள் தேவையாகவுள்ளனர்.

2000 ஆம் ஆண்டு, 3000 வெற்றிடங்களை நிரப்புவோம் என்று கூறிய அரசு- 800 பட்டதாரி ஆசிரியர்களை மட்டுமே நியமித்தது. மேலதிகமாகவுள்ள வெற்றிடங்கள் தொடர்பாக எவருமே கவனம் எடுப்பதாகத் தெரியவில்லை. எனவே, இம்முறை தொழிற்சங்கம் மட்டுமன்றி அனைத்துப் பிரிவினரையும் இணைத்துப் போராட்டம் நடத்தவுள்ளோம்.

மாகாண அமைச்சு அதிகாரிகளோ, அமைச்சர்களோ வடக்குக்கு எந்த நிகழ்ச்சிகளுக்கும் வரும்போதும், அவர்களுக்குப் பகிரங்கமாகக் கறுப்புக்கொடி காட்டி எமது எதிர்ப்பினைத் தெரிவிப்போம். இதில் மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மாநாட்டில், சிரேஷ்ட துணைத் தலைவர் ச. ஜெயராசா, சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம், யாழ். மாவட்ட செயலாளர் க.குமாரசாமி, சிரேஷ்ட துணை நிதிச் செயலாளர் சு.ஜெயக்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். (சு)

### கிணற்றினுள் வீழ்ந்து 6 வயதுப் பாலகன் பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றுக்கட்டில் விளையாடிய சிறுவன் கிணற்றினுள் தவறிவீழ்ந்து மரணமடைந்துள்ளான். நேற்றுக் காலை நீர்வேலியில் நடைபெற்ற இச்சம்பவத்தில் நடனபாதம் டிலக்ஷன் (வயது - 6) என்ற பாலகனே மரணமடைந்தவனாவான்.

இச் சிறுவன் கிணற்றின் அருகே விளையாடிக்கொண்டிருந்தபோது, தாயார் கவனிக்காத நேரம் தவறிக் கிணற்றினுள் விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (சு)

# பத்தாயிரம் படையினர் லீவில்

யாழ். குடாநாட்டில் பணியாற்றிய 10,000 இராணுவத்தினர், புதுவருட விடுமுறைக்காகத் தமது சொந்த இடங்களுக்குச் சென்றுள்ளனர். கடந்த 20 வருடங்களில் இம்முறையே இவ்வளவு பெருந்தொகையில் படையினர் லீவில் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போர்க்காலங்களில் 3000 படையினர் மட்டுமே புதுவருட லீவைப் பெற்றுவந்தனர்.

பத்து நாள் லீவு பெற்று இந்தப் பத்தாயிரம் படையினரும் சென்றுள்ளதாகவும், இவர்களின் பயணத்துக்காக விமானங்களும் கப்பல்களும் பெருமளவில் பயன்படுத்தப்பட்டதாகவும், இவர்களை மீண்டும் அழைத்து வரவும் இவற்றின் சேவை பெறப்படவுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

## கௌரவத்தை...

அநாவசியமான பிரச்சினைகளைக் கிளப்பி தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கிடையே பதற்றத்தை உருவாக்க முயலும் ஹக்கீமின் முயற்சிகளுக்கு ஐ.தே.க. இணங்கிப் போகக்கூடாதென்றும் -

வேண்டுமானால் ஹக்கீமைக் கொழும்புக்கு வரவழைத்தே பேசுமாறும் அமைச்சர் மகேஸ்வரன் பிரதமரைக் கோரியிருக்கிறார். (09)

## சக்திகிரீவனை...

பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனும் நீதிமன்றத்துக்கு வருகை தந்திருந்தார்.

சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த இரண்டு சிறுவர்கள், தமக்கு நடந்த சித்திரவதைகள் தொடர்பான காயங்களை நீதிவானுக்குக் காண்பித்து வாக்குமூலம் அளித்தனர். (சு,9)

## மூதூரில் மோதல்....

தயாரிக்கப்பட்ட சைட்டர் துப்பாக்கிகளைப் பாவித்ததன் காரணமாகவே உயிரிழப்புக்கள் ஏற்பட்டதாக அறியப்படுகின்றது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து, மூதூர் பிரதேசம் ஏனைய பிரதேசங்களுடனான தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

இதனிடையே, திருகோணமலை - தோப்பூரில் முஸ்லிம் காடையர்கள் தமிழ் மக்களைத் தாக்கியதில் மூன்று தமிழ் மக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் தோப்பூரில், முஸ்லிம் குழுவொன்று தமிழ் மக்களை வாளால் வெட்டித் தாக்கியுள்ளது. இதில் மூன்று தமிழர்கள் காயமடைந்தனர். இதன்பின் அங்கு தமிழ் மக்கள் மத்தியில் பதற்றநிலை ஏற்பட்டது.

தோப்பூரில் இதுவரை, தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எதுவித முரண்பாடுகளும் இருந்ததில்லை. நேற்று அங்கு நடந்ததே தமிழ் - முஸ்லிம் மக்களிடையே இடம்பெற்ற முதல் மோதல் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை - மூதூரில் காணாமற்போனதாக அறிவிக்கப்பட்ட சித்திரவேலு என்பவர், முஸ்லிம் காடையர்களினால் தாக்கப்பட்ட நிலையில் மீண்டிருக்கிறார்.

மூதூரில் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் வருகைக்குப்பின், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து மக்கள் செல்வதற்கு முஸலிம் குழுக்கள் அனுமதி வழங்கவில்லை.

இதேவேளை - இந்தப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள பதற்றநிலையைத் தொடர்ந்து, மூதூரின் கடற்கரைப் பிரதேசங்களான ஆலிம்சேனை, சக்கரியா நகர், சாலிநகர் போன்ற கரையோரக் கிராமங்களைச் சேர்ந்த, 300 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள், தற்பொழுது மூதூர் அரபிக் கல்லூரியில் அகதிகளாக வந்து தஞ்சமடைந்திருப்பதாக, அந்தப் பிரதேச மௌலவி கரீம் தெரிவித்தார்.

முஸ்லிம் கும்பல்களால் அச்சுறுத்தப்பட்ட தமிழ்மக்கள், பட்டித்திடல் தமிழ் அரசினர் கலவன் பாடசாலையில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

நேற்று நள்ளிரவிலும் அங்கு பதற்றமான நிலை இருந்தது. மாலை 6 மணியளவில் இருந்து மூதூர்ப் பகுதி முழுவதும் மின்சாரம் தடைப்பட்டிருந்ததாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (04,10)

# அமைச்சர் வரவை...

சமே தனக்குச் சரியாகத் தெரியாது என்றும், அதனால் தன்னை விட்டு விடுமாறும் கெஞ்சியுள்ளார். எனினும், மீண்டும் அவர் கைகளும், கண்களும் கட்டப்பட்டு அறையொன்றுக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கு அடைக்கப்பட்டார்.

இதேவேளை - அந்த அறைக்குப் பக்கத்திலிருந்த ஒரு பெண்- "இவர் ஒரு அப்பாவி, இவரைக் கடத்தி வந்தது பிழை, இவரை விட்டுவிடுங்கள்" என்று அங்கிருந்தவர்களிடம் கூறி வாக்குவாதப்பட்டதை கேட்கக்கூடியதாக இருந்ததாகவும், ஆனால், கண்கள் கட்டப்பட்டிருந்ததினால் தன்னால் எதையும் பார்க்க முடியவில்லை எனவும் சந்திரசேகரன் தெரிவித்தார்.

இந்நிலையில் - 14 ஆம், 15 ஆம் திகதிகளில் அறையிலிருந்த தனக்கு, அந்தப்பெண் பகல் உணவு கொடுக்க முனைந்தபோது, அங்கிருந்தவர்களால் தாக்கப்பட்டு, எச்சரிக்கை செய்யப்பட்டதைத் தான் கேட்டதாக சந்திரசேகரன் தெரிவித்தார்.

15 ஆம் திகதி - தன்னை இவர்கள் வெளியில் விடாதுவிட்டால் தப்பிச்செல்வதற்கு தான் உதவி செய்வதாக அந்தப் பெண் தன்னிடம் கூறியதாகவும் சந்திரசேகரன் குறிப்பிட்டார்.

இறுதியாக - 15 ஆம் திகதி மாலையில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மூதூர் வந்துவிட்டார் என்ற செய்தியைத் தொடர்ந்து, 16 ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு கடத்திச்சென்ற மூன்று இளைஞர்களும், மூதூர் இறங்குதுறையில் உள்ள பாடசாலைக்கு முன்பாக தன்னைக் கொண்டு வந்து விடுவித்தனர் எனவும், பின் அவர்கள் அங்கிருந்து ஓடிவிட்டனர் எனவும், அதனால் அவர்கள் யார் என்பதைத் தன்னால் அடையாளங்காட்ட முடியாதிருப்பதாகவும் சந்திரசேகரன் கூறினார்.

பின்னர், துறைமுகப் பகுதிக்குச்சென்று, அப்போது திருமலையிலிருந்து வந்திருந்த படகில் பயணிகளுடன் சேர்ந்து தான் மீண்டும் மூதூர் நகருக்குள் வந்து சேர்ந்ததாகவும் சந்திரசேகரன் தெரிவித்தார்.

தான் காணாமற்போனது தொடர்பாக தனது மனைவி மூதூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாகவும், மீண்டும் வீட்டுக்கு வந்த பின் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று தனக்கு நடந்த சம்பவங்களை, தான் விபரித்ததாகவும் அவர் கூறினார்.

A/L 2005
B.B.A (F.M.SP)
Sat, Sun → 11-12
ஆரம்பம்-19.04.2003→ Sat
BEACON
வெலிங்டன் சந்தியருகில்
(313)

GIT CLASSES
FOR A/L 2005 STUDENTS
கல்விப்பொதுத்தராதர உயர்தர
வகுப்புக்களுக்குச் செல்ல ஆவலாய் உள்ள
மாணவ மாணவிகளே!
உங்களுக்காக எதிர்வரும் 23.04.2003 புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு (ப.நே) GIT வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன என்பதனை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.
★ REMARKS:- பதிவுகளுக்கு முந்த வேண்டிய அவசியமேயில்லை நீங்கள் விரும்பிய நேரம் வந்து பதிவுகளை மேற்கொள்ளலாம் புதியவர்களுக்காக அடுத்த பிரிவு ஆரம்பமாகும்.
மேலதிக விபரங்களுக்கு
Z to Infinity IT Academy
இல 7 1/6, நவீனசந்தை மேல்மாடி, பலாலிவீதி,
திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி.
(சி-851)

G.C.E A/L
பொதுச்சாதாரண பரீட்சைக் கருத்தரங்கு - 2003
ஆசிரியர் தே. திருமுருகன்
19-04-2003 (சனி)
நியூட்டன் - ஆரியகுளம் சந்தி, யாழ். நகர் - காலை 10 மணி
திகழ் கல்வி நிறுவனம் - இனுவில் மாலை 4 மணி
வழிகாட்டி நூல் இங்கு கிடைக்கும்
தமிழ் - K. தர்மராஜா ஆசிரியருடைய விரிவுரைகள் யாவும் ஆரம்பமாகிவிட்டன.
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
(314)

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.65 | 97.13 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 151.04 | 152.49 |
| 1 யூரோ | 103.81 | 105.10 |
| 1 சுவிஸ் பிராங் | 69.67 | 70.87 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 58.04 | 59.18 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.86 | 25.86 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.